www.padippakam.com

16 - 31 அக்டோபர் 1999 ரூ. 4.00

# புதிய ஜனநாயகம்




ரௌடி ஆட்சியை எதிர்த்து சென்னையில் ஒரு மக்கள் குழு

## காஷ்மீர்: துப்பாக்கி முனையில் ஜனநாயகம்



படிப்பகம்

www.padippakam.com

# போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்!!

## — தேர்தல் புறக்கணிப்பு இயக்கச் செய்திகளின் தொகுப்பு

**"போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! மக்கள் சர்வாதிகார மன்றங்களைக் கட்டியமைப்போம்!" எனும் மைய முழக்கத்துடன் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய புரட்சிகர அமைப்புகள் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சார இயக்கத்தை நடத்தியுள்ளன. மக்களிடம் இவ்வியக்கத்திற்குப் பெருகிவரும் ஆதரவைக் கண்டு பீதியடைந்த ஓட்டுக் கட்சிகள், இப்பிரச்சார இயக்கத்தை ஒடுக்கிவிட முயன்றன. போலீசின் கைது - மிரட்டல் - அடக்குமுறைகளையும் மீறி இப்பிரச்சார இயக்கம் தமிழகமெங்கும் வெற்றிகரமாக நடந்தது.**

### திருச்சியில்

*வேட்பாளர்*
*பெயர்* : அரங்கராச அடைக்கலசாமி
*சாதி* : தெருப் பொறுக்கும் சொறி நாய்
*வயது* : 5
*தொகுதி* : திருச்சி
*தேர்தல் சின்னம்* : துடப்பக்கட்டை
*வாக்குறுதி*: திருச்சி நகரத்தை தமிழகத்தின் இரண்டாவது தலைநகராக்கப் பாடுபடுவேன்; உங்கள் வீட்டுக் கழிப்பறைகளை நானே இலவசமாக சுத்தம் செய்து தருவேன்.

திருச்சி நகரில் செந்தண்ணீர்புரம், செங்குளம் காலனி, எடத்தெரு, வரகனேரி, தாராநல்லூர், அரியமங்கலம், துவாக்குடி முதலான பகுதிகளில் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி தேர்தல் புறக்கணிப்பு தெருமுனைப் பிரச்சார இயக்கத்தைத் தொடர்ச்சியாக நடத்தியது. ஒவ்வொரு பகுதியிலும் வீடுவீடாகப் பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் செய்தது. திருச்சியில் செப்டம்பர் 5-ந் தேதியன்று நடைபெற்ற தேர்தலை ஒட்டி ஓட்டுக் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த வேளையில், தாராநல்லூர் பகுதியில் பு.மா.இ.மு. சார்பில் நாயை வேட்பாளராக அறிவித்து, நாய்க்கு வேட்டி உடுத்தி, மாலை அணிவித்து, பறையடித்து பிரச்சாரம் செய்யப்பட்டது. ஓட்டுக் கேட்கச் செல்லுமிடத்தில் வேட்பாளருக்கு ஆரத்தி எடுத்து துண்டு போடும் சடங்குகளும் இந்த நாயண்ணனுக்குச் செய்யப்பட்டன. எனக்கு ஓட்டுப் போட்டால் நாடாளுமன்றத்தில் உங்களுக்காக குரைத்து ஊளையிடுவேன்; உங்கள் வீட்டுக் கழிப்பிடங்களை நானே சுத்தம் செய்வேன் என்று நாயண்ணன் 'பேசியதை'த் தோழர்கள் மொழி பெயர்த்து மக்களிடம் பிரச்சாரம் செய்தனர். இப்பகுதி வாழ் மக்களிடம் இந்நிகழ்ச்சி பெருத்த வரவேற்பைப் பெற்றது.

இதைக் கண்டு பீதியடைந்த ஓட்டுக் கட்சியினர் போலீசில் புகார் செய்ததோடு, இப்படிப் பிரச்சாரம் செய்யக் கூடாது என்று தடுத்தனர். ஓட்டுப் போடு என்று சொல்வதற்கு எந்த அளவு உரிமை இருக்கிறதோ, அதே அளவு உரிமை ஓட்டுபோடாதே என்று சொல்வதற்கும் இருக்கிறது என்று தோழர்கள் பதிலடி கொடுத்து, பிரச்சாரத்தைத் தொடர்ந்துபோது, போலீசார் வந்து பிரச்சாரத்தைத் தடுத்து முன்னணித் தோழர்களைக் கைது செய்தனர். இதை எதிர்த்து முழக்கமிட்ட பு.மா.இ.மு. வினர், சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது மக்களிடம் பிரச்சாரத்தை மேலும் விரிவுபடுத்துவதாக அமைந்தது. பத்திரிகைகளும் நாய் வேட்பாளர் பற்றிய செய்தியை பரபரப்பாக வெளியிட்டதால் திருச்சி நகரெங்கும் இத்தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

திருச்சியில் தேர்தல் புறக்கணிப்பு இயக்க விளக்கப் பொதுக்கூட்டங்களை இரண்டு இடங்களில் நடத்த அனுமதி கோரி ம.க.இ.க.வும் பு.மா.இ.மு.வும் போலீசு அதிகாரிகளிடம் விண்ணப்பித்திருந்த போதிலும், போலீசார் அனுமதி தராமல் இழுத்தடித்து வந்தனர். பொதுக்கூட்டம் நடத்துவதற்கான ஜனநாயக உரிமை மறுப்பை எதிர்த்தும் உடனடியாக அனுமதி வழங்கக் கோரியும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தோழர்கள் வழக்கு தொடுத்தனர். இவ்வழக்கு 25.8.99 அன்று விசாரணைக்கு வந்தபோது, நீதிபதி திருமதி இராமதிலகம் 6.9.99 அன்று விசாரணையை ஒத்தி வைத்தார். உடனே ம.க.இ.க. வழக்கறிஞர் குறுக்கிட்டு தேர்தல் 5-ந் தேதி நடைபெறுகிறது. அதன் பிறகு வழக்கை விசாரிப்பேன் என்பது நியாயமில்லை. நாளையே வாய்தா வேண்டும் என்று வாதாடினார். மறுநாள் அரசு வழக்கறிஞர் தனது வாதுரையில், இவர்கள் தீவிரவாதிகள்; இவர்களைப் பேச அனுமதித்தால் கலவரம் ஏற்படும் என்றார். ஓட்டுப் போடு என்று பிரச்சாரம் செய்ய உரிமை உள்ளதைப் போலவே, ஓட்டுப் போடாதே என்று பிரச்சாரம் செய்யவும் சட்டப்படி உரிமை உள்ளது. அதைத் தடுப்பது கருத்துரிமையைப் பறிக்கும் செயலாகும் என்று ம.க.இ.க. வழக்கறிஞர் வாதிட்ட பிறகு, நிபந்தனையுடன் பொதுக்கூட்டம் நடத்த நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இதன்படி 2.9.99 அன்று மாலை புத்தூர் நாலுரோட்டில் தோழர் முத்து தலைமையில், ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தின் இறுதியில் ம.க.இ.கவின் எழுச்சிமிகு கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்திற்கு பெருந்திரளான மக்கள் திரண்டு வந்து ஆதரவளித்தனர்.

**திருச்சி நகரில் ஓட்டுக்கட்சிகளைப் பீதியடையச் செய்த பு.மா.இ.மு.வின் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம்.**



### திருவாரூரில்

இம்மாட்டத்தில் திருவாரூர், குடவாசல் பகுதியில் 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் தேர்தல் புறக்கணிப்பு தெருமுனைக் கூட்டங்களும், திருவாரூர் நகரில் 31.8.99 அன்று நாள் முழுவதும் தெருமுனை பிரச்சாரமும் போலீசின்

தொடர்ச்சி 23-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 14

**இதழ்: 22 - 23**

1 அக்.'99 - 31 அக்.'99

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


## தேர்தல் முடிவுகளால் நெருக்கடிகள் தீர்ந்தனவா?

**மீ**ண்டும் தொங்குநிலை நாடாளுமன்றம் அமைந்திருக்கிறது. மத்தியில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக மோதிக் கொண்ட இரண்டு பெரிய ''தேசியக் கட்சிகளுமே'' பெரும்பான்மை பெறத் தவறிவிட்டன. பாரதீய ஜனதாவோ, தட்டுத் தடுமாறி பழைய நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. காங்கிரசுக்கு உள்ளதும் குறைந்து, சோனியாவோடு ஜெயலலிதாவின் கணக்கும் பிழையாகிப் போய்விட்டது. ஆனாலும், பாரதீய ஜனதா கட்சி தலைமையிலான 24 கட்சிகளின் ''தேசிய ஜனநாயகக் கூட்டணி'' அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது. தற்காலிகமாக ஒரு நிலைத்த தன்மை ஏற்பட்டுள்ளது. இதனால், நாட்டின் அரசியல் நெருக்கடிகள் எல்லாம் தீர்ந்துவிட்டன; இனி நாட்டின் பொருளாதாரம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறும் என்பதைப்போல, பங்குச் சந்தைச் சூதாடிகளோடு சேர்ந்து செய்தித் தொடர்புச் சாதனங்கள் பிரச்சாரத்தில் இறங்கிவிட்டன. கூட்டணி ஆட்சி என்கிற அரிய சாத்தியமான யதார்த்தத்துக்குத் தேசியக் கட்சிகள் பழகிப் போய்விட்டாலே, அரசியல் பிரச்சினைகள் - நெருக்கடிகள் தீர்ந்து போய்விடும் என அவை நம்பச் சொல்லுகின்றன. ஆனால், தொங்குநிலை, கூட்டணி அரசு ஆகியவை இந்த நாட்டு நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தீராத நோய்களாகத் தொற்றிக் கொண்டுவிட்டன.

ஜெயலலிதாக்கள் யாரும் இல்லை என்றாலும் மமதாக்கள் தயவில்தான் இந்தக் கூட்டணி அரசு நீடித்திருக்க முடியும். அதுபோன்று, தமது நலன்களுக்காக கருணாநிதியோ, சந்திரபாபுவோ, பால்தாக்கரேவோ, ஜார்ஜோ, மமதாவோ மட்டுமல்ல, பா.ஜ.க.வின் கல்யாண் சிங்குகளே கூட நெருக்கடிகளைத் தருவார்கள். இது அரசியல் குருட்டு நம்பிக்கையல்ல. நாடாளுமன்ற அரசியலே இத்தகைய வேட்டைக்கான மைதானம்தான். இப்போதே, ஐக்கிய ஜனதா தளம் என்கிற பெயரில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அரசியல் பிழைப்புவாதிகளைச் சேர்ப்பது குறித்து முரண்பாடுகள் நிலவுகின்றன. இவை, ஜெயா விவகாரத்தில் வந்த பாதிப்பைவிட அதிக பாதிப்பையும், மக்களிடையே அதிக அவநம்பிக்கையையும் ஏற்படுத்தும். சதிகளுக்குப் பலியாகப் போவது போன்ற மாய்மாலங்கள் எடுபடாது. அதேசமயம், தனது கூட்டணிக் கட்சிகளையே நெட்டித் தள்ளாமல், பா.ஜ.க. தனது கால்களை நகர்த்தி, தளத்தை விரிவுபடுத்திக் கொள்ளவும் முடியாது. அந்த நோக்கத்தோடு சங்கப் பரிவார சக்திகளை மதவெறிச் செயல்களில் இறக்குவது அதற்கு எதிரான விளைவுகளையே ஏற்படுத்தும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் உறுப்புக் கட்சிகளிடையே மட்டுமல்ல, எதிர்த்தரப்புக் கட்சிகளும் உட்பட, அனைத்துக் கட்சிகளுமே உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையில் ஒத்த கருத்துடையனவாக இருக்கின்றன. அக்கொள்கைகளின் சட்டபூர்வ நிறைவேற்றத்துக்கு கடும் எதிர்ப்பு எதிர்த்தரப்பில் இருந்துகூட வராது. இருந்தாலும், ஜெயலலிதாவுடன் சேர்ந்து கொண்டு, காங்கிரசு உட்பட போலி முற்போக்குகளும் போலி கம்யூனிசவாதிகளும் அடையாள எதிர்ப்பு மட்டுமே காட்டுவர். மேல்நிலை வல்லரசுகளின் கட்டளைகளை ஏற்று, ''வளர்ச்சித் திட்டங்களை'' அமலாக்கியதால்தான் ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு பெருவெற்றி ஈட்டியதாக ஒரு பிரமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில் நிறுத்தி வைத்திருந்த விலையேற்றம் - கட்டண உயர்வு, பொதுத் துறையைப் பெருமளவு தனியாருக்குத் தாரைவார்ப்பது, நவீனமயமாக்கம் - இயந்திரமயமாக்கம், ஆலை மூடல்கள் - வேலை இழப்பு, அனைத்துத் துறைகளிலும் அந்நியக் கம்பெனிகள் அனுமதி, மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தையும் கைவிடுவது போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகள் கடும் எதிர்ப்பின்றி முடுக்கிவிடப்படும். சமீபத்திய போர் உட்பட தேசிய வெறி, போர் வெறிக்குத் தீனிபோடுவதற்காகவே இராணுவத்தை நவீனப்படுத்தவும் ஆயுதங்களைக் குவிக்கவும், எல்லையில் நீடித்த தாழ்நிலைப் போரை நடத்தவும் மக்கள் மீது பெரும் சுமை ஏற்றப்படும்..

இவற்றுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் மக்களைத் திரட்டவோ, தன்னெழுச்சியான போராட்டங்களுக்குத் தலைமையேற்கவோ வலுவும், தன்மையும் கொண்ட எதிர்க் கட்சிகள் எவையும் இல்லை. அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்குக் கண்துடைப்புக் கண்டனங்கள் தெரிவித்துவிட்டு, இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களைக் கூறி கூச்சல் போடுவதற்கு மேல் அவை எதுவும் செய்யப் போவதில்லை. அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தல்களைக் குறிவைத்து ஜெயலலிதா அரங்கேற்ற உள்ள ஆர்ப்பாட்டம், ஆரவாரங்களுக்குத் துணை நிற்பது, அடையாளப் போராட்டங்களை நடத்துவதற்கும் மேல் எதையும் செய்யும் திராணியற்றுப் போய்விட்டன இரண்டு போலிக் கம்யூனிஸ்டுகள். நாடு முழுவதும் ஒரு கட்சியோ, கூட்டணியோ மட்டும் அதிகாரத்திலும் இல்லை; எதிர்த்தரப்பாகவும் இல்லை. ஆட்சி அதிகாரத்தை பல்வேறு கட்சிகளும் பகிர்ந்து கொண்டுள்ளன. மாநில அளவிலான உள்ளூர், உடனடிப் பிரச்சினைகளையும், அதற்குக் காரணமாக மாநில நேரடி ஆட்சியாளர்களையும் மட்டுமே காண்பவர்களாக மக்கள் இருக்கும் வரை, ஜெயலலிதாக்களும், லல்லுக்களும் மீண்டும் மக்கள் ஆதரவைப் பெறுவது எளிது. எனவே, ஓட்டுப் பொறுக்கிகளிடம் வெறுப்புற்று நம்பிக்கை இழந்துள்ள மக்களுக்குச் சரியான மாற்றுத் தலைமையாக புரட்சிகர சக்திகள் மட்டுமே இருக்க முடியும்.

www.padippakam.com

# மரண பீதியில் மக்கள்
# துப்பாக்கி முனையில் தேர்தல்

**உ**லகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியாதான் என்று எல்லா ஓட்டுக் கட்சிகளும் முதலாளித்துவ பத்திரிகைகளும் பிரச்சார சாதனங்களும் நம்மை நம்பச் சொல்கின்றன. ஆனால், இந்தியாவின் ஓட்டுச்சீட்டு ஜனநாயக முறையே போலியானது; மோசடியானது; கிரிமினல் மயமானது மட்டுமல்ல; துப்பாக்கிகளைக் கொண்டுதான் அது நடத்தப்படுகிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் இந்த உண்மையை மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.

பீகாரிலும், உ.பி.யிலும் துப்பாக்கி ஏந்திய குண்டர் படையுடன் மேல்சாதி வெறியர்களும் கிரிமினல் மா.ஃபியாக்களும் தாழ்த்தப்பட்ட மக்களை அச்சுறுத்தி ஓட்டுப்போட விடாமல் செய்துவிட்டு, தாங்களே மொத்தமாக ஓட்டுப் போட்டனர். நாகாலாந்தில் தேர்தலைப் புறக்கணிக்குமாறு போராளிகள் விடுத்த அறைகூவலை ஏற்று, இடைத்தேர்தல் நடந்த அலாந்தகி சட்டமன்றத் தொகுதியில் ஒருவர்கூட ஓட்டுப் போடவில்லை. திமாபூர் நாடாளுமன்றத் தொகுதியின் 12 வாக்குச் சாவடிகளில் ஒரு ஓட்டுக்கூடப் பதிவாகவில்லை. காஷ்மீரில் போராளிகள் தேர்தலைப் புறக்கணிக்குமாறு விடுத்த அறைகூவலால், சோபூர் தொகுதியின் 8 வாக்குச் சாவடிகளில் ஒரு ஓட்டுகூடப் பதிவாகவில்லை. அத்தொகுதியின் மொத்த வாக்குப் பதிவு வெறும் 0.5% தான். இதேபோல சங்ரமா தொகுதியில் 2.5% மட்டும் வாக்குப் பதிவானது. காஷ்மீர் மாநிலம் முழுவதும் மொத்தத்தில் 11% வாக்குகள்தான் பதிவாகியுள்ளன.

இதுவும் மக்கள் தமது சுயவிருப்பத்துடன் வந்து அளித்த வாக்குகள் அல்ல. தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் காஷ்மீர் மக்களிடம் சக்தி வாய்ந்த அரசியல் பிரச்சார இயக்கமாக மாறிவிட்டதைக் கண்டு பீதியடைந்த இந்திய ஆட்சியாளர்கள், இராணுவத்தைப் பெருமளவில் கொண்டு போய் குவித்து, துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி வலுக்கட்டாயமாக போடச் செய்த வாக்குகள்தாம். சோபூர் தொகுதியிலுள்ள ஹைகாம் கிராமத்தில் நுழைந்த இராணுவம், மக்களைக் கட்டாயப்படுத்தி ஓட்டுப் போடச் செய்தபோது, கிராம மக்கள் இதற்குப் பணிய மறுத்து எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆத்திரமடைந்த இராணுவம் கிராம மக்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அல்டாப் முகம்மது மீர் என்ற 17 வயது இளைஞன் கொல்லப்பட்டான். பலர் படுகாயமடைந்தனர். சோன்வாரி தொகுதியிலுள்ள ஷில்வாத் கிராமத்தில் இதேபோல் வாக்களிக்க மறுத்த மக்கள் மீது இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் கொல்லப்பட்டனர்; 6 பேர் படுகாயமடைந்தனர்.

பாரமுல்லா மாவட்டம் சந்தோபரான் கிராமத்திற்கு இரண்டாம் கட்டத் தேர்தலுக்கு முதல் நாளன்று வந்திறங்கிய ''ஆர். ஆர்.'' எனப்படும் ராஷ்ட்ரீய துப்பாக்கிப் படை பிரிவு, ''நாளை காலை எல்லோரும் ஓட்டுப் போட வேண்டும்; பகல் உங்களுக்குச் சொந்தம்; இல்லையேல் இரவு எங்களுக்குச் சொந்தம்!'' என்று கிராம மக்களை எச்சரித்தது. பகலில் ஓட்டுப் போடாவிட்டால் இரவில் உங்களைத் தாக்குவோம் என்பதே அதன் பொருள். அதன்படி, தேர்தல் நாளன்று மாலையில் ஒவ்வொரு வீடாக நுழைந்து வாக்காளர்களின் கைவிரலில் அடையாள மை வைக்கப்பட்டுள்ளதா என்று இராணுவம் சோதித்துப் பார்த்தது. அடையாள மை இல்லாதவர்களை இழுத்துச் சென்று சித்திரவதை செய்து சுட்டுக் கொன்றது. கிராமத்தில் பதுங்கியிருந்த தீவிரவாதிகளைப் பிடிக்கச் சென்றபோது நடந்த மோதலில், இடையில் சிக்கி இவர்கள் மாண்டதாகக் கதை கட்டியது.

ஹடிபோரா - பாரேபோரா எனும் இரட்டை கிராமத்தில் இராணுவம் வந்து மிரட்டியபோது, ''யாருக்கும் ஓட்டுப் போடமாட்டோம்; எல்லா வேட்பாளர்களுமே தகுதியற்றவர்கள் - அயோக்கியர்கள்'' என்று கிராம மக்கள் ஓட்டுப் போட மறுத்தனர். ''அதனால் பரவாயில்லை. கிராமத்தில் பாதிப் பேர் ஒரு அயோக்கியனுக்கும் மீதிப்பேர் மற்றொரு அயோக்கியனுக்கும் ஓட்டுப் போட்டு விடுங்கள்'' என்று 'ஆலோசனை' கூறிய இராணுவம், துப்பாக்கி முனையில் கிராம மக்களை இழுத்துச் சென்று கட்டாயமாக ஓட்டுப் போட வைத்தது.

காஷ்மீரில் துப்பாக்கி முனையில் நடந்த வன்முறைத் தேர்தல் பற்றிய கனக்கற்ற செய்திகளை வெளியிடும் முதலாளித்துவ பத்திரிகைகளே, கார்கில் போரில் வென்றாலும் இந்திய அரசியல்வாதிகள் காஷ்மீர் மக்களின் நெஞ்சங்களை வெற்றி கொள்ள முடியவில்லையே என்று அங்கலாய்க்கின்றன. இராணுவத்தின் தாக்குதலாலும் அட்டூழியங்களாலும், வறுமை - வேலையின்மையாலும் காஷ்மீர் மாநிலமே நிலைகுலைந்து போய் கிடக்கிறது. மாநிலத்தை தொழில்மயமாக்கவும் மக்களின் வாழ்வை மேம்படுத்தவும் கிஞ்சித்தும் அக்கறையற்ற ஆட்சியாளர்கள் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும், ''காசினோ'' எனப்படும் சூதாட்ட விடுதிகளைத் திறக்கவும் கோடி கோடியாய்ச் செலவிட்டு வருகின்றனர். கார்கில் போரைத் தொடர்ந்து பெருமளவு இராணுவப் படைகளைக் குவித்து மக்களை துப்பாக்கி

தொடர்ச்சி 15-ஆம் பக்கம்

**தேர்தல் வன்முறை - சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகப் பொய்க் குற்றம் சாட்டி, ஓட்டுப் போடாத காஷ்மீரிகளை வதைக்கும் இராணுவமும் போலீசும்.**




படிப்பகம்

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## அந்நிய முதலைகளுக்கு பா.ஜ.க.வின் காவடி

இந்தியாவில் நுழையும் அந்நிய முதலாளிகள் புதிதாகத் தொழில் தொடங்குவதைவிட, ஏற்கனவே இலாபகரமாக இயங்கி வரும் தொழிற்சாலைகளைக் கைப்பற்றிக் கொள்ளுவதில்தான் அக்கறை காட்டுகின்றனர். 1995-96-ஆம் ஆண்டில் இந்தியாவில் நுழைந்த நேரடி அந்நிய முதலீட்டில் 1 சதவீதம், ஏற்கனவே நடந்து வரும் தொழில்களின் பங்குகளைக் கைப்பற்றிக் கொள்ளப் பயன்படுத்தப்பட்டது. பா.ஜ.க.வின் ஆட்சியில், இந்தக் கைப்பற்றலுக்குப் பயன்படுத்தப்பட்ட அந்நிய முதலீடு 16 சதவீதமாக உயர்ந்துவிட்டது. இது ஒருபுறமிருக்க, வெளிநாடுகளிலுள்ள பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் 600 விதமான பொருட்களை, எந்தவொரு இந்திய நிறுவனமும் தயாரிக்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

## கருப்புப் பண ஜனநாயகம்

நாடாளுமன்றத் தேர்தல்களின் பொழுது ஓட்டுக் கட்சிகள் கோடிக் கணக்கில் செலவழிப்பதில், கருப்புப் பணத்தின் பங்கு மட்டும் 4,000 கோடி ரூபாயாகும். ஒவ்வொரு பிரபலமான வேட்பாளரும் கருப்புப் பணமாக மட்டும் 1.3 கோடி ரூபாய் செலவு செய்கிறார். வரி ஏய்ப்பு செய்யும் ஆலை அதிபர்கள் - வியாபாரிகள், இலஞ்சம், ஊழல் மூலம் சொத்து சேர்த்துள்ள அதிகாரிகள், ஓட்டுக் கட்சி தலைவர்கள் - இவர்களிடமிருந்துதான் கருப்புப் பணம், வேட்பாளர்களின் கைகளுக்குப் போகிறது. இப்படி கருப்புப் பணத்தால் உருவாக்கப்படும் ஆட்சிக்கு, "மக்களாட்சி" என்ற பம்மாத்து எதற்கு?



பெல்லாரி தொகுதியிலுள்ள கிராமப்புற தேநீர்க் கடைகளில், தாழ்த்தப்பட்டோருக்கு அலுமினிய டம்ளர் தான்!

## போலீசு, தாராசிங்கின் கூட்டாளியா?

"ஒரிசாவில் ஆஸ்திரேலியப் பாதிரியாரை எரித்துக் கொன்ற தாராசிங்கும் அவனது கூட்டாளிகளும் ஓட்டுப் போட வரலாம்; அப்பொழுது அவர்களை வளைத்துப் பிடித்து விடலாம்" எனத் திட்டம் தீட்டி, அவர்களின் பெயர்கள் உள்ள நான்கு வாக்குச் சாவடிகளில் ஓட்டுப்பதிவின் போது பலத்த போலீசு காவல் போடப்பட்டிருந்தது. தாராசிங் ஓட்டுப் போட வரவில்லையென்றாலும், போலீசு தேடிக் கொண்டிருக்கும் தாராசிங்கின் நெருங்கிய கூட்டாளி பீமசேன் மகந்தா போலீசின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு கோஜபதரா என்ற வாக்குச் சாவடியில் ஓட்டுப் போட்டுவிட்டுச் சென்றுவிட்டான். இதை, போலீசின் கையாலாகாத்தனம் என்பதா? இல்லை, அவர்கள் பத்திரமாக பா.ஜ.க.விற்கு ஓட்டுப் போட்டுவிட்டுத் திரும்பச் செய்த உதவியா?

## தி.மு.க.வின் பகுத்தறிவு: காலி பெருங்காய டப்பா!

காவிரிக்காக கர்நாடகாவோடு மல்லுக்கு நிற்பதைவிட, கடவுளிடம் வேண்டிக் கொள்ளலாம் என முடிவு கட்டிவிட்டது தி.மு.க. அரசு. இந்து அறநிலையத் துறை, தமிழகத்திலுள்ள அனைத்துக் கோவில்களிலும், மழை வேண்டி, சிறப்புப் பூசைகளும், வருண ஜெபமும், மகாசாந்தி ஹோமமும் நடத்துமாறு உத்தரவிட்டுள்ளது. மேலும், கோயில் ஓதுவார்கள் திருப்பதிகத்தில் இருந்தும், நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் இருந்தும் சில குறிப்பிட்ட பாடல்களை காலையிலும் மாலையிலும் பாடி, மழை பெய்ய வேண்டிக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. பன்றியோடு சேர்ந்த கன்றும் மலம் தின்னும் என்பார்கள். அது போலாகிவிட்டது, பா.ஜ.க.வோடு கூட்டுச் சேர்ந்திருக்கும் தி.மு.க.வின் நிலை.

## பா.ஜ.க. - காங்கிரசு இரகசியக் கூட்டு! போலி கம்யூனிஸ்டுகளுக்கு வேட்டு!!

1991-இல் கேரளாவில் நடந்த நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரசு தலைமையில் அமைந்த ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும், பா.ஜ.க.வுக்கு இரகசிய உடன்பாடு இருந்ததாக கிசுகிசுக்கப்பட்ட செய்தி, உண்மைதானென்று அம்பலமாகிவிட்டது. இறந்து போய்விட்ட கேரள பா.ஜ.க. தலைவரான கே.ஜி. மரார் பற்றி கே. குன்னி கண்ணன் என்ற பத்திரிகையாளர் எழுதியுள்ள நூலில், பா.ஜ.க.விற்கும், காங்கிரசிற்கும்; பா.ஜ.க.விற்கும் இந்திய யூனியன் முசுலீம் லீக்கிற்கும் இடையே திருச்சூரிலும், திருவனந்தபுரத்திலும் பேச்சு வார்த்தைகள் நடந்து, உடன்பாடு முடிவானது பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. கொள்கை வேறுபாடு கொண்ட நாற்காலி கம்யூனிஸ்டுகளும், காங்கிரசுமே தேர்தல் உடன்பாடு கொள்ளும் போது, கொள்கை வேறுபாடே இல்லாத பா.ஜ.க.வும், காங்கிரசும் உடன்பாடு கொண்டது அதிர்ச்சிதரத்தக்கதல்ல!

## பெல்லாரி: தெரிந்ததும் தெரியாததும்

சோனியா காந்திக்கும், சுஷ்மா சுவராஜுக்கும் இடையே கடும்போட்டி நிலவும் பெல்லாரி, இந்தியாவில் பலருக்கும் தெரிந்த பெயராகிவிட்டது. காங்கிரசு தோல்வியே சந்தித்திராத இந்தத் தொகுதியின் பல கிராமங்களில் இன்னும் இரட்டை டம்ளர் முறைதான் நிலவுகிறது; இத்தொகுதியைச் சேர்ந்த பஸ்ஸபுரா கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோருக்கு, மேல் சாதியினர் மனது வைத்தால்தான் குடி தண்ணீரே கிடைக்கும் என்பதுதான் இந்தியாவில் பலருக்கும் தெரியாது. "சோனியா வெளிநாட்டவர்" என தேச பக்தி வேடம் போடும் பா.ஜ.க.வும், "நம்ம வீட்டு" மருமகள் சோனியாவும் இத்தீண்டாமைக் கொடுமைகள் பற்றி மௌனம் சாதிக்கும் அயோக்கியத்தனத்தை என்னவென்பது?

www.padippakam.com

சென்னை - சேத்துப்பட்டில் ★ சாராய ரௌடியின் வீடு சூறையாடப்பட்டது ★ கள்ளச்சாராயம் - கஞ்சா விற்பனைக்குத் தடை ★ கடைகளில் மாமூல் வாங்கும் ரௌடித்தனத்துக்கு முற்றுப்புள்ளி

# சட்டம் சாதிக்காததை மக்கள் சக்தி சாதித்தது!

கடந்த மாதம் செப்டம்பர் 19-ஆம் தேதி சென்னை - சேத்துப்பட்டு பகுதியிலுள்ள கள்ளச் சாராய வியாபாரிகளுக்கு சரக்கு ''சப்ளை'' செய்ய முயன்ற பாரதி என்ற நபரிடமிருந்து கள்ளச் சாராய பாக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டு, அவை பொது மக்கள் முன்னிலையில் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன; இனி, சேத்துப்பட்டில் கள்ளச் சாராயம் விற்கவோ / ''சப்ளை'' செய்யவோ முயலக் கூடாது என பாரதி எச்சரிக்கப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டார். இதேபோல், சேத்துப்பட்டில் கள்ளச் சாராயம் விற்றுவரும் இரு பெண்களுக்கும் எச்சரிக்கை விடப்பட்டது.

இந்த நல்ல காரியத்தை போலீசோ, அரசு அதிகாரிகளோ செய்திருக்க வாய்ப்பேயில்லை என அடித்துக் கூறிவிடலாம். சேத்துப்பட்டிலுள்ள எம்.எஸ். நகர், ஜெகந்நாதபுரம், மங்களபுரம், பிருந்தாவனம், வி.ஆர்.ஆர். காலனி பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கட்டியமைத்திருக்கும் ''சேத்துப்பட்டு மக்கள் குழு''தான், இப்பொழுது அப்பகுதியில் கள்ளச் சாராயம் - போதைப் பொருட்கள் விற்கப்படுவதற்கு எதிராகவும், ரௌடிகளின் அட்டகாசத்தை ஒடுக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

''அரசியலும், சமூகமும் கிரிமினல்களின் கையில் சிக்கிவிட்டது'' - இது, யாருமே மறுக்க முடியாத உண்மை. இந்த அபாயத்தை எப்படி முறியடிப்பது? இந்தக் கேள்விக்கு மெத்த படித்த அறிவாளிகளிடம்கூட சரியான விடை கிடையாது. இந்தக் கேள்விக்கான விடைதான், இந்த அபாயத்தை எதிர்த்த போராட்டத்தின் ஒரு துவக்கப் புள்ளிதான் ''சேத்துப்பட்டு மக்கள் குழு.''

சமூகப் பிரச்சினைகளுக்கான எந்தவொரு மக்கள் இயக்கமும் திடீரென்று தோன்றிவிடுவதில்லை. சேத்துப்பட்டு மக்கள் குழுவும் இதற்கு விதிவிலக்கானதல்ல. தங்கையா என்ற ரௌடியாலும் அவனிடம் பொறுக்கித் தின்னும் போலீசு அதிகாரிகளாலும் சேத்துப்பட்டு பகுதி மக்கள் சந்தித்த அடக்குமுறைகளும், இழப்புகளும் மிக அதிகம். இந்த அனுபவம்தான், ''நாமே ஒன்று திரண்டு தங்கையாவுக்கு எதிராகப் போராடினால்தான், விடிவு பிறக்கும்'' என்ற படிப்பினையை அம்மக்களுக்கு ஏற்படுத்தியது.

★☆★

அயோத்தி குப்பத்திற்கு வீரமணி, ஜாம்பஜாருக்கு குள்ள சேகர் என்ற சென்னை நகர ''தாதா''க்களின் பட்டியலில், சேத்துப்பட்டுக்கு தங்கையா. பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன்பு, பெயருக்கு ''வாட்ச்மேன்'' வேலை பார்த்துக் கொண்டு, மின்சார ரயிலில் ''பிக் பாக்கெட்'' அடிப்பதையே பொழப்பாக நடத்திக் கொண்டிருந்த தங்கையா, இன்று கள்ளச் சாராய வியாபாரி; போதை மருந்து விற்பனைக் கும்பலின் தலைவன்; கூலிப் பட்டாளத்தின் தளபதி.

சென்னையில், சேத்துப்பட்டு, புதிய பூபதி நகர், நேரு பூங்கா, அம்பத்தூர் தொழிற்பேட்டை, வில்லிவாக்கம், ஓட்டேரி, பெரியமேடு, புளியந்தோப்பு, மைய சிறைச்சாலை - இங்கெல்லாம் ஓடுவது தங்கையாவின் சரக்குதான். கள்ளச் சாராய வியாபாரம் மூலம் மட்டும், தங்கையா விற்கு, ஒரு நாளைக்கு 70,000 ரூபாய் கிடைக்கும் என சேத்துப்பட்டு பகுதி மக்கள் கூறுகிறார்கள். வீரமணி, குள்ளசேகரோடும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு - தனது தொழில் ராஜ்ஜியத்தை விரிவுபடுத்திக் கொண்டிருந்தான், தங்கையா.

சேத்துப்பட்டு பகுதியில் எந்தப் பிரச்சினையானாலும், — பொதுப் பிரச்சினையோ அல்லது தனி நபரின் குடும்பப் பிரச்சினையோ - அது பற்றி சேத்துப்பட்டு போலீசு நிலையத்திற்கு புகார் வந்தால், ''சட்டம் என்ன சொல்லுகிறது என்பதை விட, சாமி (தங்கையா) என்ன சொல்லுகிறார்'' என்றுதான் போலீசு அதிகாரிகள் விசாரிப்பார்கள். தங்கையாவின் கட்டப் பஞ்சாயத்தை மிஞ்சி எதுவும் இல்லை; அதை யாரும் மீறக் கூடாது என்பதில் சேத்துப்பட்டு போலீசுக்கு தனி அக்கறை. சேத்துப்பட்டில் தன்னை எல்லோரும் ''சாமி'' என்றுதான் அழைக்க வேண்டும் என தங்கையா போட்டிருந்த கட்டளையை சேத்துப்பட்டு பகுதி மக்கள் மதிக்காத போதும், சேத்துப்பட்டு போலீசு தங்கையாவை, ''சாமி, ''சாமி'' எனக் கூப்பிட்டு, தனது விசுவாசத்தைக் காட்டிக் கொண்டது. உதவி போலீசு கமிஷனர் கணேசன், தங்கையாவோடு போலீசு ஜீப்பில் சேத்துப்பட்டைச் சுற்றி வந்து, தங்கையா கைகாட்டும் இளைஞர்களை அள்ளிக் கொண்டு போவது சர்வ சாதாரணமானது.

போலீசின் இந்த 'உதவி'க்காக உதவி போலீசு கமிஷனர் கணேசனுக்கு, தங்கையா வாராவாரம் கொடுத்து வந்த மாமூல் ரூ. 3,000/- இதுதவிர, சேத்துப்பட்டு, கீழ்ப்பாக்கம் போலீசு நிலையங்களுக்கு தனி கவனிப்பு. சேத்துப்பட்டு போலீசு நிலையத்திற்கு சம்மந்தமில்லாத ஆசீர்வாதம், ஸ்டாலின் என்ற இரு போலீசார், தங்கையா வீசும் எலும்புத் துண்டுக்காகவே, உடுப்போடு சேத்துப்பட்டிற்குள் நுழைந்து பகுதி மக்களை / இளைஞர்களை உருட்டி மிரட்டும் அராஜகத்தைச் சொல்லி மாள முடியாது.

''செல்ஃபோன்'' மூலம் பேசியே காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் அளவிற்கு, தங்கையாவிற்கும் சேத்துப்பட்டு பகுதி அ.தி.மு.க. செயலர் தர்மலிங்கத்திற்கும் நெருக்கமுண்டு. தங்கையாவின் தாய் திரேசா சேத்துப்பட்டு பகுதியின் முன்னாள் தி.மு.க. மகளிர் அணிச் செயலர்; தங்கையாவின் அண்ணன் சம்பத் சேத்துப்பட்டு பகுதியின் அ.தி.மு.க.காரன்; ''தாதா'' தங்கையாதான், பூவை. மூர்த்தி தொடங்கியுள்ள புரட்சி பாரதக் கட்சியின் தொழிற்சங்கத் தலைவர்.

தங்கையா புரட்சி பாரதம் கட்சியில் சேர்ந்தவுடனேயே, இனி, சேத்துப்பட்டில் தனது படத்தையும், பூவை. மூர்த்தியின் படத்தையும் தவிர, வேறு எந்தவொரு கட்சித் தலைவரின் படமும் சுவர்களில் வரையக் கூடாது எனக் கட்டளையிட்டான்; தங்கையா சேத்துப்பட்டு வியாபாரிகள் சங்கத் தலைவரான பிறகு, பெரும்பாலான கடைகளில் அவனது படம் தொங்கத் தொடங்கியது.

கள்ளச்சாராயம் - கஞ்சா விற்பனை

**சேத்துப்பட்டு மக்கள் குழுவால் கைப்பற்றப்பட்ட கள்ளச் சாராய பாக்கெட்டுகள் பொதுமக்கள் முன்னிலையில் எரிக்கப்படுகிறது.**





படிப்பகம்

www.padippakam.com

யில் கிடைத்த வருமானத்தைக் கொண்டு, சேத்துப்பட்டில் மூணு அடுக்கு மாடி வீடு கட்டிக் கொண்ட தங்கையா, ''டிராவல்ஸ்'', ஷாமியானா பந்தல் போடும் காண்டிராக்ட், எஸ்.டி.டி.பூத் போன்ற தொழில்களிலும் கள்ளச் சாராய வருமானத்தை முதலீடு செய்து, தொழில் அதிபராகத் தன்னைக் காட்டிக் கொண்டான்; சேத்துப்பட்டில் யாராவது இறந்து போனால் நேரடியாகச் சென்று இறந்தவரின் உடலுக்கு மாலை அணிவித்து துக்கம் விசாரிப்பது, ''கானா'' பாட்டு பாடுவது மூலம் சேத்துப்பட்டு மக்களின் மீது அக்கறை கொண்டவனாகவும், பகுதி நலனை விரும்பும் பரோபகாரியாகவும் தன்னைக் காட்டிக் கொண்டான் தங்கையா. சுருக்கமாகச் சொன்னால், தங்கையா திடீர்ப் பணக்கார அரசியல் ரவுடியாக தன்னை வளர்த்துக் கொள்வதில் குறியாக இருந்தான்.

★☆★

தனக்குப் போட்டியாக சேத்துப்பட்டில் யாரும் வளர்ந்துவிடக் கூடாது என்பதில் குறியாக இருந்து வந்தான் தங்கையா. ஆறாண்டுகளுக்கு முன்பு, தங்கையாவின் தொழில் எதிரி இயேசுவை சித்திரவதை செய்தும், அரிவாளால் வெட்டியும், குற்றுயிராக எழும்பூருக்கு அருகேயுள்ள ''டி.பி.ஐ.'' எனுமிடத்தில் வீசிச் சென்றது தங்கையாவின் கூலிப்பட்டாளம்.

இயேசு கொலை செய்யப்பட்ட வழக்கில், தங்கையாதான் முதல் குற்றவாளி. கொலை நடந்து முதல்இரண்டு ஆண்டுகள் அவ்வழக்கை 'ஒழுங்காக' நடத்தி வருவதாகப் பம்மாத்து காட்டிய சேத்துப்பட்டு போலீசார், அதன்பின் அந்த வழக்கைக் குப்பைக் கூடைக்குள் தள்ளி விட்டனர். கடந்த நான்கு ஆண்டுகளில் இவ்வழக்கின் மீது எந்தவித விசாரணையும் நடைபெறவில்லை. ஆனால், சேத்துப்பட்டு போலீசோ இயேசுவின் மனைவியிடம், ''வழக்கு முடிந்துவிட்டதாகவும், அரசாங்கம் பரிதாபப்பட்டு உனக்கு ஏதாவது பணம் கொடுக்கும்'' என்றும் சரடு திரித்து வருகின்றனர்.

தங்கையாவின் கூட்டாளியாக இருந்து பின்னர் பகையாளியாக மாறிய சுரேஷ் என்ற இளைஞர், சென்ற ஆண்டு தீபாவளியன்று, மதிய நேரத்தில், நட்ட நடுத் தெருவில், தங்கையாவின் கூலிப் படையால் அடித்தே கொல்லப்பட்டார். சுரேஷைக் கொலை செய்வதற்காக, தங்கையா, கிட்டதட்ட நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் வெறிபிடித்த தெரு நாயைப் போலச் சுற்றி வந்தான் என்பது சேத்துப்பட்டு பகுதி மக்கள் அனைவருக்கும் தெரியும்.

சுரேஷின் தாயும், மனைவியும் இக்கொலை தொடர்பாக தங்கையா மீது வழக்குப் பதியச் சென்ற பொழுது, சேத்துப்பட்டு போலீசு, ''இக்கொலையை தங்கையா



ஜேப்படி திருடனாகத் தொடங்கி, போலீசு உதவியுடன் ரௌடியாக வளர்ந்த தங்கையா

செய்யவேயில்லை'' என தங்கையாவின் வக்கீலாக மாறி வாதாடினர்; மேலும், தங்கையாவின் நெருங்கிய உறவினர்களான கண்ணா, ஹரிஷ் என்ற இருவரின் மீதும் கொலை வழக்குப் பதிவு செய்து, தங்கையாவைத் தப்பிக்க வைத்தனர். ஆனாலும், இக்கொலை வழக்கு தொடர்பாக இதுநாள் வரை எவ்வித விசாரணையும் நடைபெறவேயில்லை.

தாழ்த்தப்பட்டோர் பெரும்பான்மையாக வாழும் சேத்துப்பட்டு பகுதி இளைஞர்களில், தான் கைகாட்டியவனெல்லாம் தனக்கு அடியாளாக மாறி, கள்ளச் சாராயம் விற்க வேண்டும்; கூலிக்கு கொலை செய்யப் போக வேண்டும் என விரும்பினான் தங்கையா. தங்கையாவின் விருப்பத்திற்கு அடிபணியாத இளைஞர்கள், தங்கையா கும்பலால் கடத்திச் செல்லப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டனர். இளைஞர்களைச் சித்திரவதை செய்வதற்காகவே, சித்திரவதைக் கூடமொன்றை உருவாக்கி வைத்திருந்தான் தங்கையா.

பொதுநல நோக்கத்தோடு சேத்துப்பட்டு பகுதி இளைஞர்கள் உருவாக்கிய திருவள்ளுவர் நற்பணி மன்றம் தங்கையாவால் தடை செய்யப்பட்டு, மன்றத்தின் விளம்பரப் பலகை அடித்து நொறுக்கப்பட்டது; இம்மன்றத்தில் சேர்ந்ததற்காக, முருகன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற இளைஞரின் தந்தை தங்கையா கும்பலால் வீடு புகுந்து வெட்டப்பட்டார்; வீடு சூறையாடப்பட்டது. தங்கையாவை எதிர்த்ததால் கலை (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற இளைஞரின் வீட்டினுள் புகுந்து, அவரது சகோதரியைக் கத்தியைக் காட்டி மிரட்டி பலாத்காரப்படுத்த முயன்றது.

தங்கையா கும்பல். ஆட்டோ ஓட்டி வாழ்க்கை நடத்தி வரும் மணி (பெயர் மாற்றப்பட்டுள்ளது) தங்கையாவின் அடியாளாக மாற மறுத்ததால், அவரது திருமண நாளன்றே அவரைக் கொலை செய்ய முயன்றான் தங்கையா; மணி தப்பித்து விடவே, திருமணத்திற்கு வாங்கி வைத்திருந்த பொருட்களை அக்கும்பல் சூறையாடிச் சென்றது.

தங்கையாவின் இந்த அடாவடித்தனங்களை போலீசிடம் புகாராகக் கொடுக்க முடியாது என்பது ஒருபுறமிருக்க, சேத்துப்பட்டு போலீசே, பகுதி இளைஞர்களைச் சீரழிக்கும் தங்கையாவின் விருப்பத்திற்கு துணை நின்றனர். தங்கையாவால் போலீசுக்கு அடையாளம் காட்டப்படும் இளைஞர்கள் போலீசு நிலையத்தில் சட்ட விரோதமாக விசாரிக்கப்பட்டனர்; சிறை வைக்கப்பட்டனர். அவர்களின் மீது பொய் வழக்குகள் போடப்பட்டன. எம்.எஸ். நகரைச் சேர்ந்த தாரா என்பவரின் தம்பி ஜம்புவையும் அவரது மகன் பூபதியையும், தங்கையாவின் தூண்டுதலால், குண்டர் தடுப்புச் சட்டத்தில் உள்ளே தள்ளிவிட்டார் சேத்துப்பட்டு போலீசு ஆய்வாளர் கண்ணப்பன்.

தங்கையா, தனக்குத் தேவையான கூலிப்பட்டாளத்தை சேத்துப்பட்டு இளைஞர்கள் மத்தியில் இருந்து உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக இருந்தான்; சேத்துப்பட்டு இளைஞர்கள், உதிரித் தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதும், உழைத்து வாழ வேண்டும்; நேர்மையாக வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். மேலும், சேத்துப்பட்டு இளைஞர்கள் தங்கையாவை, சக மனிதனாகக் கூட மதிக்கத் தயாராக இருந்ததில்லை.

இப்படி, தன்னை மதிக்காத இளைஞர்களை, தனக்கு அடியாளாக மாற மறுக்கும் இளைஞர்களைக் குறிவைத்து தாக்கி வந்தான் தங்கையா. அந்த இளைஞர்களை, தனது சித்திரவதைக் கூடத்திற்குக் கடத்திச் சென்று உருட்டுக் கட்டையால் தாக்குவது; கால்களில் ஈரச் சாக்கைக் கட்டிவிட்டு கல்லைத் தூக்கி போடுவது; பிளேடாலும், கத்தியாலும் உடலெங்கும் கீறுவது; வீடு புகுந்து தாக்குவது என தங்கையா அந்த இளைஞர்களின் உயிரோடு விளையாடியதை அடுக்கிக் கொண்டே போகலாம்.

போலீசின் துணையோடு தங்கையா செய்து வந்த ரௌடித்தனத்தால் பாதிக்கப்படாத இளைஞர்களை, குடும்பங்களை சேத்துப்பட்டில் விரல் விட்டு எண்ணி விடலாம். ரௌடி தங்கையா, போலீசின் துணையோடு சேத்துப்பட்டில் ராஜாவாக வலம் வந்து கொண்டிருக்க, நேர்மையாக வாழ வேண்டும் என்ற எண்ணங் கொண்ட இளைஞர்களோ, உயிருக்குப் பயந்து, சேத்துப்பட்டை விட்டு

ரௌடி தங்கையா கும்பலால் வெட்டப்பட்ட எம்.எஸ். நகரைச் சேர்ந்த ஆண்ட்ரூஸ்





படிப்பகம்

www.padippakam.com

வெளியேற நேர்ந்தது.

இந்த அநியாயத்தை யாரிடம் போய் முறையிடுவது? போலீசை நம்ப முடியாது; அ.தி.மு.க.வோ தங்கையாவின் பக்கம். ஆளும் கட்சி தி.மு.க.வோ தங்கையா என்ற பெயரைச் சொல்லுவதற்குக் கூடத் தயாராக இல்லை. ''சி.எம்.செல்'' வரையிலும் தங்கையாவின் செல்வாக்கு கொடிகட்டிப் பறந்ததாக பகுதி மக்கள் கூறுகிறார்கள். இப்படி, ஒரு நாளல்ல, இரண்டு நாளல்ல; கடந்த ஆறேழு ஆண்டுகளாக சேத்துப்பட்டு பகுதி மக்கள் ரௌடி தங்கையாவால் அடக்கி ஒடுக்கப்பட்டனர்; அம்மக்களின் கோபத்தையும் எதிர்ப்பையும்; ரௌடி தங்கையா வன்முறையால் ஒடுக்கி வந்தான்.

★☆★




இந்நிலையில், சேத்துப்பட்டு எம்.எஸ். நகரைச் சேர்ந்த ''பெயிண்டர்'' உதயகுமார், தங்கையா கும்பலோடு மோதியதற்காக, 29.8.99 அன்று இரவு தங்கையா ஏவிவிட்ட ரவுடி கும்பலால் வெட்டிக் கொல்லப்பட்டார். குமாரோடு இருந்த ஆண்ட்ரூஸ், பிரான்சிஸ், சசிகுமார் ஆகியோரும் தங்கையா கும்பலால் வெட்டப்பட்டனர். உதயாவின் மரணம் பொது மக்களிடம் கனன்று கொண்டிருந்த ஆத்திரத்தைக் கிளறிவிட்டது. தேர்தலையொட்டி சேத்துப்பட்டுப் பகுதியில் கட்டப்பட்டிருந்த ஓட்டுக் கட்சிகளின் தோரணங்கள் அறுத்தெறியப்பட்டன; கட்சிக் கொடிகள் கீழ் இறக்கப்பட்டன. மறுநாள் அதிகாலையிலேயே, சேத்துப்பட்டு பகுதி பொது மக்கள் ரௌடி தங்கையாவைக் கைது செய்யக் கோரி தன்னெழுச்சியான போராட்டத்தில் குதித்தனர். வீட்டில் படுத்துக் கொண்டிருந்த தங்கையாவைக் கைது செய்யாத சேத்துப்பட்டு போலீசு, போராட்டத்தில் குதித்த பொது மக்களின் மீது பாய்ந்து குதற பெரும் போலீசு பட்டாளத்தைக் குவித்தது.

தேர்தலையொட்டி சேத்துப்பட்டு பகுதி மக்களின் காலைச் சுற்றி வந்த ஓட்டுக் கட்சிகள், அவர்கள் போராட்டத்தில் குதித்தபொழுது, அவர்களைப் பாய்ந்து குதற போலீசு பட்டாளம் குவிக்கப்பட்டபொழுது, வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றன. ரௌடி தங்கையாவுக்கும் அ.தி.மு.க.வுக்கும் இருந்த நெருக்கத்தையும், ரௌடி தங்கையாவைப் பகைத்துக் கொள்ள விரும்பாத தி.மு.க.வின் கையாலாகாத்தனத்தையும் சேத்துப்பட்டு பகுதி மக்கள் நன்கு அறிந்து இருந்ததால், இந்தக் கட்சிகளை அவர்கள் நம்புவதற்கும் தயாராக இல்லை. மாறாக, சேத்துப்பட்டு பகுதியில் செயல்பட்டு வந்த மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் தலைமையின் கீழ் போராடத் தயாராக இருந்தனர்.

சேத்துப்பட்டு பகுதியில் போலீசின் துணையோடு சட்ட விரோதமாக இயங்கி வந்த ''திருப்தி ஒயின்ஸ்'' என்ற மதுக்கடையை மூடக்கோரி ம.க.இ.க. போராடிய பொழுது, தங்கையா, ம.க.இ.க. தோழர்களை மிரட்டி போராட்டத்தைத் தடுத்துவிட முயன்றான். தங்கையாவின் மிரட்டலையும் மீறி போராட்டம் தொடர்ந்ததால், தங்கையா, ''மாதா மாதம் மாமூல் வாங்கிக் கொள்ளுங்கள்; போராட்டத்தை விட்டு விடுங்கள்'' என விலை பேச முயன்றும் மூக்கறுபட்டான். ரௌடி தங்கையாவை எதிர்ப்பதில் ம.க.இ.க. காட்டிய துணிவு, உறுதி, நேர்மையை அறிந்திருந்த பகுதி மக்கள், ஓட்டுக் கட்சிகளைப் புறக்கணித்து விட்டு, ம.க.இ.க.வின் தலைமையில் போராட முன் வந்தனர்.

போராட்டத்தின் தலைமையை எடுத்துக் கொண்ட ம.க.இ.க., உடனடியாக, அதே இடத்தில் தெருமுனைக் கூட்டம் நடத்த முடிவு செய்தது. இக்கூட்டத்திற்கு பகுதியைச் சேர்ந்த அனைத்து ஓட்டுக் கட்சித் தலைவர்களும் அழைக்கப்பட்டனர். இக்கூட்டத்தில், ரௌடி தங்கையா உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

மக்களின் தன்னெழுச்சியான போராட்டம் சிதறுண்டு போய்விடாமல், முறைப்படுத்தப்பட்டுவிட்டதை உணர்ந்து கொண்ட போலீசார், பேச்சு வார்த்தைக்கு அழைத்தனர். இப்பேச்சுவார்த்தையின் பொழுது, தங்கையாவையும், அவனது அடியாள் கும்பலையும் கைது செய்ய ஒத்துக் கொண்ட போலீசார், தங்கையாவை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தங்கையா கைது செய்யப்பட்ட பின்னும் மக்களின் கோபம் தணிந்துவிடவில்லை. புரட்சி பாரதம் கட்சி அலுவலகம் என்ற பெயரில் அவன் கட்டி வைத்திருந்த சித்திரவதைக் கூடம் மக்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது; தங்கையாவின் வீடு சூறையாடப்பட்டது. தங்கையாவின் தயவில் வாழ்ந்து வந்த சில சமூக விரோதிகளின் வீடுகளும் பொது மக்களின் தாக்குதலில் இருந்து தப்பவில்லை.

இந்தத் தாக்குதல்கள், விஷமிகளின் வன்முறை வெறியாட்டம் அல்ல. மக்களின் வர்க்கக் கோபம் கட்டவிழும் பொழுது, நடைபெற்றுவிடும் தவிர்க்கவியலாத சம்பவங்கள். அடக்க முடியாத தங்களின் கோபத்தை, இந்த நியாயமான தாக்குதலில் வெளிப்படுத்திய அதே பொது மக்கள்தான், உதயகுமாரின் சவ ஊர்வலத்தின்பொழுது மிகவும் அமைதியான முறையில் ரௌடித்தனத்திற்கு எதிரான தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்தனர்; 2000 பொது மக்கள் கலந்து கொண்ட அந்த இறுதி ஊர்வலத்தில் உணர்வுகள் கொந்தளித்துக் கொண்டிருந்தபோதும், ''ரௌடித்தனத்தை எதிர்க்கும் நமக்கு ஒழுங்கும், கட்டுப்பாடும் தேவை'' என்ற ம.க.இ.க.வின் கட்டளையை ஏற்று, ஊர்வலம் அசம்பாவிதமோ, சிறு சலசலப்போ இன்றி நடந்தது.

உதயகுமாரின் சவ அடக்கத்திற்கு முன்பாக அனைத்துக் கட்சிகளின் சார்பில் இரங்கல் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் பேசிய ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன், ''தங்கையா கைது செய்யப்பட்டிருப்பதை, மக்களின் கோபத்தில் இருந்து அவனைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகத்தான் பார்க்க முடியும்; தங்கையா போன்ற ரௌடிகளிடமிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அமைப்பு அவசியமானது. மக்கள் அமைப்பில் இணைந்து போராடினால் தான், தங்கையாவை சட்டப்படி கூட தண்டிக்க முடியும்'' எனக் குறிப்பிட்டார். இதன் அடிப்படையில் 3.3.99 அன்று மக்களைக் கூட்டி ''சேத்துப்பட்டு மக்கள் குழு'' கட்டப்பட்டு, அதன் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

சேத்துப்பட்டு மக்கள் குழு, சேத்துப்பட்டு பகுதியில் கள்ளச் சாராயம், கஞ்சா, பிற போதைப் பொருட்கள் விற்கப்படுவதைத் தடை செய்துள்ளது; ரௌடிகள், தங்கள்வாலைச் சுருட்டிக் கொள்ள வேண்டும் என எச்சரிக்கப்பட்டுள்ளனர்; சேத்துப்பட்டில் கடை நடத்தும் வியாபாரிகளிடம், எந்த ரௌடிக்கும் மாமூல் தர வேண்டியதில்லையென்றும், யாராவது மாமூல் கேட்டு மிரட்டினால், மக்கள் குழுவிடம் புகார் கொடுக்குமாறும் கூறப்பட்டுள்ளது. மக்கள் குழுவின் இக்கட்டளைகளைப் பகுதியெங்கும் நடைமுறைப்படுத்துவதற்கும்/ கண்காணிப்பதற்கும் வசதியாக இளைஞர்



படிப்பகம்

www.padippakam.com

களைக் கொண்ட கண்காணிப்புக் குழுவொன்றையும் அமைக்க மக்கள் குழு முயற்சித்து வருகிறது.

★☆★

எந்த மக்கள் குழுவை சேத்துப்பட்டு பகுதி மக்கள் தங்களின் பாதுகாவலனாக உணர்கிறார்களோ, அதே மக்கள் குழுவை சேத்துப்பட்டு போலீசு தனது கள்ள வருமானத்தின், தனது மொட்டை ஆதிக்கத்தின் தடைக் கல்லாகப் பார்க்கிறது. மக்கள் குழுவில் இளைஞர்கள் சேருவதைத் தடுப்பதற்காக, மக்கள் குழு, நக்சல்பாரிகள் அமைப்பு எனப் பீதியூட்டி வருகின்றனர். போலீசின் இந்தப் பீதியூட்டலைக் கேட்டு இளைஞர்கள் யாரும் அரண்டுவிடவில்லை. மக்களால் புறக்கணிப்பட்டுவிடுவோமோ என்ற அச்சத்தில் மக்கள் குழுவில் சேர்ந்து கொண்ட தி.மு.க. நிர்வாகிகள்தான் தொடை நடுங்கிப் போய்விட்டனர்.

சேத்துப்பட்டு போலீசார், பகுதி மக்களிடம் இழந்துபோன தனது மரியாதையை மீட்டுக் கொள்ளும் முகமாக, ''நாம் எல்லோரும் சேர்ந்து ஒரு கண்காணிப்பு குழுவை அமைப்போம்; சட்டத்தை நீங்கள் கையில் எடுத்துக் கொள்ள வேண்டாம்; சமூக விரோதிகளின் மீது நடவடிக்கை எடுப்பதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என நைச்சியமாகப் பேசி வருகின்றனர்.

''சில நல்ல போலீசு அதிகாரிகள் இருந்தாலும், போலீசை நம்ப முடியாது'' என்கிறார்கள் சேத்துப்பட்டைச் சேர்ந்த பெண்கள். இதை அவர்கள் ஒப்புக்காக கூறவில்லை. ''சேத்துப்பட்டு மக்கள் குழுவில் எப்படி இணைவது? அதற்கு என்ன தகுதி வேண்டும்?'' என இளைஞர்கள் ஆர்வமாக விசாரித்துச் செல்வதையும், மக்கள் குழுவில் இணைந்திருக்கும் இளைஞர்கள், பகுதி மக்களின் பாதுகாப்பிற்காக, ஒவ்வொரு இரவும் தெருக்களில் படுத்து உறங்குவதையும் பார்க்கும் பொழுது, போலீசின் மீது மக்கள் வைத்திருக்கும் 'நம்பிக்கை'யை உணர முடிந்தது.

''புதிய ஜனநாயகம்'' சார்பில் சேத்துப்பட்டு பகுதி மக்களை நேர்காணல் எடுக்கச் சென்ற பொழுது, ரௌடிகள் - போலீசு - அரசியல் தலைவர்களுக்கு இடையே இருக்கும் உறவை விளக்கிவிட்டு, ''தங்கையாவின் இடத்தில் இன்னொரு வேலய்யாவை உருவாக்குவார்கள். இதை எதிர்த்து எப்படி போராடப் போகிறீர்கள்?'' எனக் கேட்டோம். ''நாட்டுக்காக, இராணுவத்திற்கு ஒரு பிள்ளையை அனுப்புவதில்லையா? அது போல, சேத்துப்பட்டு நல்லா... அமைதியா இருக்கணும்கிறதுக்காக, எங்க வீடுகளிலிருந்து ஒரு புள்ளைய மக்கள் குழுவிற்கு அனுப்பி வைப்போம்'' என்றார் ஒரு பெண்.

ரௌடிகளின், ''தாதா''க்களின் ஆதிக்கம், சேத்துப்பட்டில் மட்டுமல்ல, சென்னையில் மட்டுமல்ல, தமிழகமெங்குமே வேர்விட்டுப் பரவியிருக்கிறது. எந்த அரசாங்கம் வந்தாலும், எத்துணை சட்டங்கள் போட்டாலும், இந்த அபாயத்தை 'வீழ்த்த' முடிவதில்லை. இதற்குக் காரணமே, நாடாளுமன்ற ஆட்சி முறைக்கு இன்று கிரிமினல்கள் தேவைப்படுகிறார்கள். இனி, இந்த அபாயத்தை சட்டத்தின் வழி நின்று அழிக்க முடியாது; மக்களை அணிதிரட்டி, கிரிமினல்களைத் தண்டிக்கும் உரிமையை மக்கள் தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ளுவதன் மூலம் மட்டுமே ஒழிக்க முடியும். இந்த உண்மையை சேத்துப்பட்டு பகுதி மக்கள் உணர்ந்து வருகிறார்கள்; தமிழகமும், விரைவில் உணர்ந்து கொள்ளும்!

● சுப்பு

---

★ முகப்பு அட்டைப்படம் நாடாளுமன்ற அடிமைத்தனத்தை எடுப்பாக உணர்த்தியது. மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையும் போராட்டமும் என்ற செய்தித் தொகுப்புக் கட்டுரை, உண்மை நிலவரத்தை நேரில் பார்ப்பது போல் இருந்தது. இந்த இதழ் மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர் போராட்டச் சிறப்பிதழ் போல் அமைந்துள்ளது.

— தீரன் வெங்கட், ஈரோடு.

★ மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் வாழ்க்கையும் போராட்டமும் பற்றிய கட்டுரையானது, தொழிலாளர்களைப் படுகொலை செய்தவர்களை எப்போது பழிதீர்ப்பது என்றுதான் படிக்கும் ஒவ்வொரு மனத்தையும் ஏங்கச் செய்கிறது.

— எல். ராஜா, சிவகிரி.

★ நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தைத் திரைகிழித்துக் காட்டும் பேசும்படமாக அட்டைப்படம் அமைந்திருந்தது. இந்த இதழ் எமது பகுதியில் தேர்தல் நடப்பதற்குப் பத்து நாட்களுக்கு முன்னதாக வந்திருந்தால், வேட்பாளர்களை ஊருக்குள் நுழைய விட்டிருக்க மாட்டோம் என்று இதழ் விற்பனையின் போது பல வாசகர்கள் கூறினார்கள். மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர் போராட்டத்தை சாதியப் பிரச்சினையாகவும், மூடி மறைத்தும் அரைகுறையாகவும் இதர முதலாளித்துவ பத்திரிகைகள் எழுதிய நிலையில், புதிய ஜனநாயகம் மட்டுமே உண்மை நிலையை விளக்கி, உழைக்கும் வர்க்கத்தின் பத்திரிகை என்று நிரூபித்துள்ளது. இரட்டை நாக்குப் பேர்வழிகளான தமிழினவாதிகளின் சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்தியது சிறப்பானது. தேர்தல் புறக்கணிப்பு இயக்கச் செய்திகள் அனைத்தும் பெரிதும் உற்சாகமளித்தன. குறிப்பாக, வேதாரண்யம் பகுதிச் செய்தி கவனத்தைக் கவர்ந்தது.




## வாசகர் கடிதம்

— வாசகர் வட்டம், சென்னை.

★ தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைப் போராட்டம் பற்றிய கட்டுரையானது, முழு உண்மையையும் படம் பிடித்துக் காட்டுவது போல் அமைந்திருந்தது. காலையும் மாலையும் குடிக்கும் தேநீரில் தொழிலாளர்களின் உழைப்பு மட்டுமல்ல, இரத்தமும் கலந்துள்ளதை அறிந்த போது நெஞ்சம் குமுறியது. பெண் தொழிலாளர் சகோதரிகள் சிறுநீர் கழிக்கும் போதும் மாதவிடாய் காலங்களிலும் ஆதாரம் காட்டச் சொல்லி கங்காணிகள் மிரட்டும் கொடுமையை எண்ணி வேதனை அடைந்தேன். கொத்தடிமைத்தனத்தில் உழலும் தோட்டத் தொழிலாளர்கள் உரிமை கேட்டுப் போராடினால், கருணாநிதி அரசு கொலை வெறியாட்டம் போடுகிறது. வை.கோ., ராமதாசு, ஜெயலலிதா, இல. கணேசன் என ஓட்டுக் கட்சித் தலைவர்கள் இக்கொடுஞ் செயலை எதிர்த்து ஒன்றும் செய்யவில்லை. குமுறிக் கொண்டிருக்கும் தொழிலாளி வர்க்கம் இத்துரோகிகளை நிச்சயம் விரட்டியடிக்கவே செய்யும்.

— இ.சி. இராமச்சந்திரன், ஈரோடு.

★ புதிய ஜனநாயகம் செப்டம்பர் இதழை எதேச்சையாகக் காண நேரிட்டது. ''தேர்தல் புறக்கணிப்பு ஏன்?'' என்ற தலையங்கம் மிக அருமை. இதனை நிரூபிக்கும் வகையிலேயே முதல் மற்றும் இரண்டாம் கட்டத் தேர்தல் மிகக் குறைந்த சதவிகிதமே வாக்குப் பதிவாகியுள்ளது. மக்கள் இந்தப் போலி ஜனநாயக அரசியலைக் கண்டு கொண்டுள்ளனர். மேலும், பல புதிய கருத்துக்களைத் தாங்கி வரும் இவ்விதழ் இராமநாதபுரம் பகுதியில் கிடைக்க ஆவன செய்யுங்கள்.

— அமீர் சுல்தான், கீழக்கரை.


படிப்பகம்

# கிழக்கு திமோர்: ஊனமான விடுதலை

**கிழக்கு திமோர் விடுதலைக்கு ஆதரவு காட்டும் ஏகாதிபத்தியங்கள், அந்நாட்டைத் தங்களின் காலனியாக்கிக் கொள்ளவே முயலும்**

திமோர், தென் கிழக்காசியாவில், பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவாகும். திமோர் தீவுக்கு மிக அருகாமையில் அதன் தென் பகுதியில் ஆஸ்திரேலியாவும்; கிழக்கு, மேற்கு, வடப குதிகளில் இந்தோனேஷியத் தீவுக் கூட்டங்களும் அமைந்துள் ளன. திமோர் தீவின், மேற்குப் பகுதி இந் தோனேஷியா நாட்டைச் சேர்ந்தது; அதன் கிழக்குப் பகுதி - கிழக்கு திமோர் என்று அழைக்கப்படுவது - 1975 க்கு முன்பு வரை போர்த்துகல் நாட்டின் காலனியாக இருந்தது. கிழக்கு திமோர், போர்த்துகல் நாட்டின் காலனி ஆட்சியில் இருந்து விடுத லையடைந்த குறுகிய காலத்திலேயே, இந் தோனேஷிய இராணுவ சர்வாதிகாரக் கும் பல், கிழக்கு திமோரை ஆக்கிரமித்து அடி மைப்படுத்திக் கொண்டது.

கிழக்கு திமோர் போர்த்துகல் நாட் டின் காலனியாக இருந்தபொழுது, காலனி ஆட்சியை எதிர்த்துப் போரிட்டு வந்த பல் வேறு ஆயுதக் குழுக்களும் இணைந்து, "ஃபிரெடிலின்" எனும் ஐக்கியப்பட்ட அமைப்பைக் கட்டியமைத்தனர். ஃபிரெடி லின், காலனி ஆட்சியாளர்களுக்கு எதி ராக கொரில்லா போர் முறையில் அமைந்த ஆயுதப் போராட்டத்தை நடத்தியது. பிரெ டிலினின் ஆயுதப் போராட்டம் 1970 களின் பின் மிகத் தீவிரமடைந்து, 1975 நவம்பர் 26 அன்று நாட்டின் விடுதலை யைச் சாதித்தனர்.

கிழக்கு திமோர் விடுதலையடைந்த மறுவாரமே, இந்தோனேஷியா, தனது இராணுவத்தை ஏவிவிட்டு, அந்நாட்டை ஆக்கிமித்தது. அமெரிக்காவிடமிருந்து நவீன ஆயுதங்களைப் பெற்றிருந்த இந் தோனேஷிய இராணுவத்தை, இளம் சுதந் திர அரசு எதிர்த்துப் போரிட முடியாமல் பின்வாங்க நேர்ந்தது. இந்தோனேஷியா கிழக்கு திமோரை ஆக்கிரமித்த ஆறே மாதத்திற்குள், 60,000 திமோரியர்களைக் கொன்றொழித்து, திமோரிய மக்களின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங் களை மிருகத்தனமாக ஒடுக்கி, 1976 ஜூலை 17 அன்று, கிழக்கு திமோரை இந் தோனேஷியாவின் 27-ஆவது மாநிலமாக இணைத்துக் கொண்டது.

ஃபிரெடிலினைத் தடை செய்த இராணுவ சர்வாதிகாரிகள், கிழக்கு திமோரில், ஐக்கிய ஜனநாயகக் கட்சி, பெரும் நிலப்பிரபுக்களின் சார்பான அபோடேடி கட்சி - இவ்விரண்டு கட்சி களின் கூட்டணியின் கீழ் ஒரு பொம் மையாட்சியை நிறுவினர். திமோரிய மக்கள், திருமணம் செய்து கொள்ளுவ தற்குக் கூட, இராணுவ ஆட்சியாளர்க ளிடமிருந்து உரிமம் பெற வேண்டும் எனும் அளவில், அம்மக்களின் அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டன. அடையாள அட்டை பெறாத திமோரியர் கள், நடுத்தெருவிலேயே நாயைப் போல சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மறுபுறம், திமோரிய மக்களின் இன அடையாளங்களை அழிக்கும் முகமாக, அவர்களின் மீது இந்தோனேஷிய மொழி யும், தேசிய கீதமும், இந்தோனேஷிய உணவு, உடை போன்ற பண்பாட்டு வழக் கங்களும் திணிக்கப்பட்டன. திமோரிய மக்கள் மரபு வழிப்பட்ட தங்கள் கிராமிய நடனங்களை ஆடுவது, பாடல்களைப் பாடுவது தடை செய்யப்பட்டன.

ஃபிரெடிலின் அமைப்பைத் தடை செய்து, மக்களிடமிருந்து பிரித்துவிட இந் தோனேஷிய அரசு செய்த முயற்சிகள் அனைத்தும் படுதோல்வியில் முடிந்தது. எனினும், அவ்வமைப்பின் தலைவர்க ளுள் சிலரை, தனது அடிவருடியாக மாற் றிக் கொள்ளுவதில் ஆக்கிரமிப்பாளர்கள் வெற்றி கண்டனர். அதே சமயம் ஃபிரெடி லின், சனானா குஸ்மாவோ என்ற போரா ளியின் தலைமையில் இந்தோனேஷியா வின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திவந் தது.

இருபத்து நான்கு ஆண்டுகளாக நடந்து வ்ரும் இவ்விடுதலைப் போராட்டத் தில், ஏறத்தாழ இரண்டு இலட்சம் திமோரி யர்கள் இந்தோனேஷிய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர்; விடுத லைப் போராளிகளை ஒழிக்க கிராமங்க ளையே தீக்கிரையாக்கும் இராணுவப் பாசி சத் தாக்குதலின் காரணமாக, உயிரோடு இருக்கும் திமோரிய மக்களுள் பெருவாரி யானோர் சொந்த நாட்டிலேயே அநாதைக ளாக, அகதிகளாக அலைந்து திரிகின்றனர். கிட்டதட்ட 30,000 திமோரியர்கள், அகதிக ளாக வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள னர். சனானா குஸ்மாவோ கைது செய்யப் பட்டு, ஆயுள் தண்ட னைக் கைதியாக, தனி மைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தோனே ஷியா ஆக்கிரமிப் புக்கு எதிராகச் சமரச மின்றி ஃபிரெடிலின் நடத்தி வந்த ஆயுதப் போராட்டம்; கிழக்கு திமோரிய மக்களின் விடுதலை உணர்வை நசுக்க இந்தோனேஷியா இராணுவ சர்வா திகாரிகள் தொடுத்த பாசிசத் தாக்குதல்க ளின் தோல்வி; இந்தோனேஷியாவில் ஏற் பட்டுள்ள அரசியல், பொருளாதார நெருக் கடிகள்; கிழக்கு திமோர் விடுதலைக்கு திடீர் ஆதரவாளர்களாக மாறியிருக்கும் ஏகாதிபத்தியங்கள், ஐ.நா. மன்றத்தின் மூலம் கொடுத்து வரும் நிர்பந்தம் - இவை காரணமாக, கிழக்கு திமோரின் எதிர்காலம் குறித்து பொது வாக்கெடுப்பு நடத்த இந் தோனேஷியா ஒத்துக் கொண்டது.

ஐ.நா.வின் மேற்பார்வையில் ஆகஸ்டு 30 அன்று நடந்த அப்பொது வாக் கெடுப்பில், 78.5 சதவீத வாக்காளர்கள் கிழக்கு திமோரின் சுதந்திரத்தை ஆதரித் தும், 21 சதவீத வாக்காளர்கள் இந்தோனே ஷிய அரசின் கீழ் தன்னாட்சி என்பதை ஆதரித்தும் வாக்களித்தனர்.

எந்தவொரு ஆக்கிரமிப்பாளனும் மக்களின் சுதந்திர உணர்வை மதித்து நடந்து கொண்டதாக வரலாறு கிடையாது. பெருவாரியான திமோரிய மக்கள் சுதந்தி ரத்திற்கு ஆதரவாக வாக்களித்த பின்னும் இது பற்றிய முடிவை இந்தோனேஷிய நாடாளுமன்றம் தான் எடுக்க முடியும் என்று ஒப்பந்த (பொது வாக்கெடுப்பு குறித்து ஐ.நா., இந்தோனேஷியா, போர்த் துகல்லுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தம்) விதியைக் காட்டி, கிழக்கு திமோரின் விடுத லையைத் தடுத்துவிடத் துடிக்கிறது இந் தோனேஷியா. இந்த ஒப்பந்த விதிச் சிக்கல் ஒருபுறமிருக்க, கிழக்கு திமோரில் உள்ள இந்தோனேஷிய ஆதரவு கூலிப்படை யைத் தூண்டி விட்டு, ஃபிரெடிலின் ஆதர வாளர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

ஏகாதிபத்தியங்கள், கூலிப்படையின் இத்தாக்குதலைக் காட்டி, ஐ.நா.வின் ஒப்பு தலோடு ஆஸ்திரேலியாவின் தலைமை யில் பன்னாட்டுப் படையொன்றை கிழக்கு திமோருக்கு அனுப்பியுள்ளன. இந்தோ னேஷியா இராணுவத்தை கிழக்கு திமோரில் இருந்து வெளியேற்றுவதும், கூலிப்படையினரை நிராயுதபாணியாக் குவதும் பன்னாட்டுப் படையின் நோக் கமென்றும் கிழக்கு திமோரில் சுதந்திர அரசு அமையும் வரை அப்படை அங்கு தங்கியிருக்கும் என்றும் கூறப்படுகிறது. கிழக்கு திமோரில் பன்னாட்டுப் படை நுழைந்திருப்பது, திமோரிய மக்கள், பேயி டமிருந்து தப்பித்து, பிசாசிடம் மாட்டிக் கொண்டதைப் போல் ஆகிவிட்டது.







www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## ஏகாதிபத்தியங்களின் இரட்டை வேடம்

கிழக்கு திமோரின் விடுதலை குறித்து இன்று 'அக்கறை' காட்டும் அமெரிக்காவும், இங்கிலாந்தும், ஆஸ்திரேலியாவும், கிழக்கு திமோரை இந்தோனேஷியா ஆக்கிரமித்த பொழுது எப்படி நடந்து கொண்டன என்பதை தெரிந்து கொள்வது நல்லது.

1974-ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் பிரதமராக இருந்த கௌக் விட்லாம், "கிழக்கு திமோர் இந்தோனேஷியாவின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்" என வெளிப்படையாகக் கூறி, இந்தோனேஷியாவின் விஸ்தரிப்பு நோக்கத்திற்கு ஆதரவளித்தார். இந்தோனேஷியா, கிழக்கு திமோரை ஆக்கிரமிப்பதற்கு நான்கு மாதங்கள் முன்பாக, அப்பொழுது இந்தோனேஷியாவில் ஆஸ்திரேலியா தூதராக இருந்த ரிச்சர்ட் ஆல்காட், இந்தோனேஷியாவின் ஆக்கிரமிப்பு சதியினை ஆதரித்து, ஆஸ்திரேலிய அரசுக்கு எழுதிய கடிதத்தில், "நான், கொள்கையை விட, நடைமுறைக்குச் சாத்தியமானதைத் தான் ஆதரிக்கிறேன் என்பது எனக்கே தெரியும். ஆனால், தேசிய நலன்கள், வெளியுறவுக் கொள்கை என்பவையெல்லாம் இவைதான்" என்று எழுதினார். ஆஸ்திரேலியாவுக்கு கொள்கையைவிட, இந்தோனேஷியத் தீவுக் கூட்டங்களில் கிடைத்த எண்ணெயும், இயற்கை எரிவாயுவும்தான் முக்கியமானதாகத் தெரிந்தது. இந்தோனேஷியா, கிழக்கு திமோரை ஆக்கிரமித்து இணைத்துக் கொண்டதை 1979-இல் அங்கீகரித்த ஆஸ்திரேலியா, "திமோர் இடைவெளி ஒப்பந்தம்" என்ற பெயரில் இந்தோனேஷியாவுடன் தொழில் ஒப்பந்தமும் செய்து கொண்டது.




கிழக்கு திமோரின் விடுதலையை ஆதரித்து நடந்த ஊர்வலம். (உள்படம்) ஃபிரெடிலினின் தலைவர் சனானா குஸ்மாவோ

1975-ஆம் ஆண்டு இந்தோனேஷியாவில் இருந்த பிரிட்டன் தூதர், தனது அரசுக்கு எழுதிய கடிதத்தில், "இந்தோனேஷியா, எவ்விதத் தடையின்றியும், விரைவாகவும் கிழக்கு திமோரை இணைத்துக் கொள்வது பிரிட்டனின் நலன்களுக்கு உகந்தது" என எழுதினார். திமோரிய மக்களின் மீது இன ஒடுக்குமுறை பாசிசத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்ட இந்தோனேஷியா அதிபர் சுகர்டோவோடு, பிரிட்டன் பிரதம மந்திரியாக இருந்த தாட்சர் ஆயுத ஏற்றுமதி ஒப்பந்தங்களைப் போட்டுக் கொண்டார். இந்த ஆயுத விற்பனையால் கொள்ளை இலாபமடைந்த பிரிட்டிஷ் கனவான்களுள் தாட்சரின் மகனும் ஒருவர். இந்தோனேஷிய இராணுவ சர்வாதிகாரிகள், பிரிட்டன் தயாரிப்பான ஹாக் போர் விமானங்களைப் பயன்படுத்திதான் திமோரிய கிராமங்களைப் பூண்டோடு அழித்தனர்; ஃபிரெடிலின் போராளிகளை நர வேட்டையாடினர்.

ஈராக், குவைத்தை ஆக்கிரமித்ததைக் காரணமாகக் காட்டி, கடந்த எட்டு ஆண்டுகளாக ஈராகின் மீது பொருளாதார - இராணுவத் தாக்குதல்கள் தொடுத்துவரும் அமெரிக்கா, இந்தோனேஷியாவின் ஆக்கிரமிப்பை, இது நாள் வரை வாயளவில்கூட கண்டித்தது கிடையாது. பிரிட்டனைப் போலவே அமெரிக்காவும் இந்தோனேஷியாவிற்கு ஆயுத ஏற்றுமதி செய்து வந்ததோடு, இந்தோனேஷிய இராணுவத்திற்குப் பயிற்சியும் அளித்தது. இதைவிட முக்கியமாக, அப்பொழுது அமெரிக்க அதிபராக இருந்த ஜெரால்டு ஃபோர்டும், அரசுச் செயலர் ஹென்றி கிஸ்ஸிங்கரும், இந்தோனேஷியா கிழக்கு திமோரை ஆக்கிரமிப்பதற்கு இரண்டு நாள் முன்னதாக, இந்தோனேஷியா சென்று, அரசு விருந்தினர்களாகத் தலைநகர் ஜகர்தாவில் தங்கியிருந்தனர்.

அமெரிக்க அதிபர் அரசு விருந்தினராகத் தங்கி வயிறை நிரப்பிக் கொண்டிருந்தரா அல்லது இந்தோனேஷியாவின் ஆக்கிரமிப்பை ஆசிர்வதிக்கச் சென்றாரா என்பதைக் கண்டுபிடிப்பது ஒன்றும் கடினமானதல்ல! கிழக்கு திமோரை ஆக்கிரமித்த அதிபர் சுகர்டோவின் ஆட்சியே, அமெரிக்கா இந்தோனேஷிய மக்களின் மீது திணித்ததுதான். 1965-இல் இந்தோனேஷிய அதிபராக இருந்த சுகர்னோவின் தேசிய அரசை, கம்யூனிச பூச்சாண்டி காட்டி, அதிரடி அரண்மனைப் புரட்சி மூலம் கவிழ்த்துவிட்டு, சுகர்டோவை அதிபராக்கியது அமெரிக்கா. எனவே, கிழக்கு திமோரை இந்தோனேஷியா ஆக்கிரமித்தது, அமெரிக்காவின் சம்மதமின்றி நடந்தே இருக்க முடியாது.

இந்தோனேஷிய ஆக்கிரமிப்பால் அகதிகளான கிழக்கு திமோர் மக்கள், உணவுக்காகப் பன்னாட்டு படை வீரனிடம் கையேந்தும் அவலம்



### ஏகாதிபத்திய ஆதரவின் பின்னணி

1991-இல் சோவியத் யூனியன் சிதைவுண்டு சிதறிப் போனதற்குப் பிறகு, அமெரிக்கா தலைமையிலான மேற்குலக ஏகாதிபத்தியங்கள், தங்களுக்குச் சாதகமாக இருக்கும் பட்சத்தில், தேசிய இனங்கள் தனித்தனி தேசிய அரசுகள் அமைத்துக் கொள்வதை நேரிடையாகவே ஆதரிக்கத் தொடங்கியுள்ளன. கிழக்கு ஐரோப்பாவில், ரசியாவுக்கு எதிராக அமெரிக்காவின், "நேட்டோ" நாடுகளின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, யுகோஸ்லா


படிப்பகம்

வியாவில் இருந்து குரோஷியாவும், போஸ்னியாவும் பிரிந்து சென்றதையும், கொசோவா இன மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் ஆதரித்தன; தங்களின் சுரண்டல் மேலாதிக்க நலன்களுக்குப் பாதிப்பில்லாத வகையில் பாலஸ்தீனியர்களுக்கு வரம்புக்குட்பட்ட தன்னாட்சி உரிமை கிடைக்க ஒப்பந்தங்கள் போட்டன; செக்கோஸ்லாவாகியா இரு நாடுகளாகப் பிரிந்தது; தென் ஆப்பிரிக்காவிலும்,. காங்கோவிலும் நடைபெற்றுள்ள ஆட்சி மாற்றங்கள் - இவை அனைத்துமே மேற்குலக ஏகாதிபத்தியங்களின் சம்மதம், ஆதரவோடுதான் நடந்தன. அதேசமயம், தங்களின் நலன்களுக்கு எதிரானதென்றால் தேசிய இனப் போராட்டங்களை ஒடுக்கவும் தயங்குவதில்லை. இதற்கு உதாரணமாக, துருக்கியில் நடைபெற்றுவரும் குர்தீஷ் தேசிய இனப் போராட்டத்தைக் கூறலாம். இந்த அடிப்படையில்தான், ஏகாதிபத்தியங்கள் கிழக்கு திமோர் மக்களின் விடுதலைக்கு ஆதரவு தருகின்றன.

கிழக்கு திமோர் பொருளாதார ரீதியாக மட்டுமல்லாது, இராணுவ ரீதியாகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். இந்தியப் பெருங்கடலில் உள்ள டி கோ கார்சியா தீவில் அமெரிக்கா அமைந்துள்ள கப்பற்படை தளத்திற்கு அமெரிக்காவின் இராணுவக் கப்பல்கள் சென்று வருவதற்கு கிழக்கு திமோரை ஒட்டியுள்ள கடல்வழியைத்தான் பயன்படுத்துகின்றன. பனிப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, இடதுசாரி ஃபிரெடிலினின் ஆட்சி கிழக்கு திமோரில் அமைவது சோவியத் யூனியனுக்குச் சாதகமாகிவிடும் எனக் கருதிய ஏகாதிபத்தியங்கள், இந்தோனேஷியா கிழக்கு திமோரை ஆக்கிரமித்ததை ஆதரித்தன. தற்பொழுது, "கம்யூனிச" அபாயம் மறைந்துவிட்டதாலும், ஃபிரெடிலின் அமைப்பும் குட்டி முதலாளித்துவ தலைவர்களால் தலைமை தாங்கப்படுவதாலும், கிழக்கு திமோரின் விடுதலையை ஆதரிப்பதால் ஏகாதிபத்தியங்களுக்கு எவ்வித நட்டமோ அபாயமோ ஏற்படப் போவதில்லை.

கிழக்கு திமோரின் விடுதலையை அங்கீகரிக்க இந்தோனேஷிய இராணுவ சர்வாதிகார ஆளுங்கும்பல் பல முட்டுக்கட்டைகள் போட்டாலும், அவை ஏகாதிபத்தியங்களின் விருப்பத்திற்கு எதிராகச் செயல்பட முடியாது. இந்தோனேஷியா, தனது பெருளாதார நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதற்கு ஏகாதிபத்தியங்களை நம்பியிருப்பதும், இந்தோனேஷிய இராணுவ சர்வாதிகாரம் உள்நாட்டிலும், உலகெங்கிலும் அம்பலப்பட்டு போயிருப்பதும், கிழக்கு திமோர் இந்தோனேஷியாவின் ஆக்கிரமிப்பில் இருந்து விடுதலை அடைவதை தவிர்க்க முடியாததாக்கிவிட்டது.

இது, கிழக்கு திமோர் மக்களின் நீண்ட விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க வெற்றியாகும். எனினும், கிழக்கு திமோர் விவகாரத்தில் மூக்கை நுழைத்துள்ள ஏகாதிபத்தியங்கள், தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான அம்மக்களின் போராட்டம், ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்த போராட்டமாக வளர்ந்துவிடாமல் தடுத்து, சிதைத்து, சீரழிக்கவே முயலும். கிழக்கு திமோரின் பொருளாதாரத்தைச் சீரமைப்பது என்ற போர்வையில், ஐ.எம்.எஃப்., உலக வங்கி மூலம் கடன், "உதவி" அளித்து, கிழக்கு திமோரை தங்களின் மறுகாலனியாக மாற்றிக் கொள்ளவே முயலுவார்கள்.

கிழக்கு திமோர், கொசோவா, பாலஸ்தீன மக்களின் இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்ட அனுபவம் கற்றுத்தரும் பாடம் ஒன்று உண்டு: தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை, ஏகாதிபத்திய கட்டமைவுக்குள் அமுக்கிவிடத் துடிக்கும் ஏகாதிபத்தியங்களின் சூழ்ச்சிக்கு எதிராகவும், தேசிய இனப் போராளிகள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதுதான் அது!

• செல்வம்

# விநாயகர் சதுர்த்தி: இந்து முன்னணியின் ரவுடித்தனம் கோவை போலீசின் விசுவாசம்

கோவையின் கணபதி மார்க்கெட் பகுதியில் உள்ள பொன்னையர் வீதியில், விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பெரியதொரு விநாயகர் சிலையை வைக்க இந்து முன்னணியினர் ஏற்பாடு செய்து வந்தனர். இவர்கள் இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. உள்ளூர் மக்களிடமும் விநாயகர் சிலை வைக்க இவர்கள் அனுமதி பெறவில்லை. இத்தகைய அடாவடித்தனமான மதவெறியர்களால் உள்ளூரில் வீண் பிரச்சினைகள் ஏற்படும் என்று கருதிய இப்பகுதியைச் சேர்ந்த ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., தோழர்களும், 'மார்க்சிஸ்டு' கட்சி, தி.க. (வீரமணி) அணிகளும் இங்கு விநாயகர் சிலை வைக்க வேண்டாம் என்று இந்து முன்னணியினரிடம் கூறினர். இந்து முன்னணிக் குண்டர்களோ, "கண்டிப்பாக இங்கு விநாயகர் சிலை வைத்து விழா நடத்துவோம். அதைக் கேட்க நீங்கள் யார்? முடிந்தால் தடுத்துப் பாருங்கள்!" என்று சவால் விட்டு மிரட்டினர்.

விழாவைச் சொல்லி கடைகளில் கட்டாய வசூல் கொள்ளை நடத்தவும், கலவரத்தின் மூலம் காலூன்றவும் முயற்சிக்கும் இந்து வெறியர்களின் அடாவடித்தனத்தை முறியடிக்கும் நோக்கத்துடன், இப்பகுதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் இந்து முன்னணியின் அபாயத்தைப் பற்றி விளக்கி, கையெழுத்து வாங்கி போலீசிடம் தருவதென ம.க.இ.க. மற்றும் 'மார்க்சிஸ்டு', தி.க.வினர் முடிவு செய்தனர். இதன்படி முதற்கட்டமாக 85 வீடுகளில் கையெழுத்துப் பெற்று, நேரமாகி விட்டதால் மறுநாள் தொடரலாம் என்று இவர்கள் திரும்பிக் கொண்டிருந்தபோது, குடிபோதையில் வந்த இந்து முன்னணியைச் சேர்ந்த 4 பேர் வழிமறித்தனர். "எதுவாக இருந்தாலும் நேராக மோத வேண்டியதுதானே? எதற்காக வீட்டுப் பெண்களிடம் பொய் சொல்லி கையெழுத்து வாங்குகிறீர்கள்?" என்று வீண் தகராறு செய்தனர். தோழர்கள் அவர்களிடம் பொறுமையாக விளக்கிக் கொண்டிருக்கும் போதே, இ.மு. ரௌடிகள் தோழர்களைத் தாக்க, இரு தரப்பினரிடையே கைகலப்பு ஏற்பட்டது. இதையறிந்து உள்ளூர் மக்கள் உடனடியாகத் திரளத் தொடங்கியதும், இ.மு. ரௌடிகள் பயந்து பின்வாங்கி ஓடிவிட்டனர். ம.க.இ.க. தோழர்கள் அங்கேயே மக்களிடம் இந்து வெறியர்களின் நோக்கத்தையும் ரவுடித்தனத்தையும் அம்பலப்படுத்தினர்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த போலீசார், ம.க.இ.க. தோழர்கள், 'மார்க்சிஸ்டு', தி.க. என 6 பேரைக் கைது செய்து கொட்டடியில் அடைத்துவிட்டு, பின்னர் வீதிக்கு வந்து ம.க.இ.க.வினர் மீது புகார் தரும்படி மக்களிடம் கேட்டனர். இதற்கு மக்கள் உடன்பட மறுத்துவிட்டனர். பின்னர் கைதான தோழர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அன்றிரவு இந்து முன்னணி குண்டர்கள் தாம் எழுதிய விநாயகர் சதுர்த்தி விழா சுவரெழுத்தின் மீது நீலச்சாயத்தை ஊற்றிவிட்டு, ம.க.இ.க.வினர்தான் ஊற்றினர் என்று போலீசில் புகார் செய்ய, போலீசார் இப்பகுதிக்கு வந்து தோழர்களைத் தேடத் தொடங்கினர். நாங்கள் இதைச் செய்யவில்லை என்று ம.க.இ.க. பொறுப்பாளர் போலீசிடம் கூறிய பிறகு போலீசார் திரும்பினர்.

இதன் பின்னர், தொடர்ந்து இந்து முன்னணிக்கு எதிராக கூட்டாகப் பிரச்சாரம் செய்யலாம் என்று அழைத்தபோது, 'மார்க்சிஸ்டு'களும் தி.க.வினரும் சாக்கு போக்கு கூறி ஒதுங்கிக் கொண்டனர். இந்து முன்னணியினர் அமைத்த விநாயகர் களிமண் சிலையை துப்பாக்கி ஏந்திய போலீசார் இரவு பகலாகக் காவல் காத்தனர். 250-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ள தெருவில் இந்த விநாயகர் சிலையை யாரும் திரும்பிக்கூடப் பார்க்காத நிலையில், 4-5 பெண்களை வைத்து விழாவை இந்து முன்னணியினர் கோமாளித்தனமாகக் கொண்டாடினர்.

புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, கோவை.



படிப்பகம்

www.padippakam.com



## தேர்தலுக்குப் பின் காத்திருக்கும் தாக்குதல்

**கா**ர்கில் போரில் பாகிஸ்தானின் கொட்டத்தை ஒடுக்கி மிகப்பெரிய சாதனை புரிந்து விட்டதாக ஓட்டுப் பொறுக்கிய பாரதீய ஜனதா அரசு, தீவிரமாகிவிட்ட நிதிப் பற்றாக்குறையை சமாளிக்க முடியாமல் விழிபிதுங்கி நிற்கிறது. கடந்த ஏப்ரல் முதல் ஜூலை முடிய 4 மாத காலத்தில் மட்டும் நெருக்கடியைச் சமாளிக்க பா.ஜ.க. அரசு 53,649 கோடி ரூபாயை கடன் வாங்கியுள்ளது. கடந்த ஆண்டில் இதே காலத்தை ஒப்பிடும் போது இது 27% அதிகமாகும். கார்கில் போரினால் ஏற்பட்ட பூதாகரமான இராணுவச் செலவு, தொழிலுற்பத்திச் சரிவினால் தொழில் வரி வசூலாவதில் மந்த நிலை, வாங்கிய உள்நாட்டு - வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டித் தொகை அதிகரித்து வருவது முதலானவற்றால் பற்றாக்குறை தீவிரமாகி பா.ஜ.க. அரசு கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறது. கடந்த ஏப்ரல் முதல் ஜூலை முடிய நிதிப் பற்றாக்குறை 34,031 கோடியாக உயர்ந்துள்ளது. முந்தைய ஆண்டில் இதே காலத்தை ஒப்பிடும் போது இது 9,157 கோடி ரூபாய் அதிகமாகும். "இதுவரை சந்தித்திராத மிக மோசமான நிதி நெருக்கடியில் நாடு சிக்கிக் கொண்டுள்ளது. இதிலிருந்து மீள வழிகாணாவிட்டால் நாடு கடன் பொறியில் சிக்கித் திவாலாவது நிச்சயம்" என்று முதலாளித்துவ பொருளாதார அறிஞர்களே எச்சரிக்கின்றனர்.



வறுமையின் கொடுமை: இந்திய இராணுவத்தில் கூலிப் படையினராகச் சேர்ந்துள்ள கூர்க்கா இளைஞர்கள்.



வறுமைக் கொடுமையிலிருந்து மீள, இந்திய இராணுவத்தில் சேர முயன்று, ஆளெடுப்பின் போது கூட்ட நெரிசலைக் கலைக்க போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த இளைஞர்கள்

கடந்த நிதியாண்டின் நிதிப் பற்றாக்குறை 1,12,280 கோடி ரூபாய். வரும் நிதியாண்டில் இது மேலும் அதிகரிக்கும் என்பது நிச்சயமாகி விட்டதால், மக்கள் தலைமீது வரிச்சுமையை மேலும் கூடுதலாகத் திணிப்பதைத் தவிர ஆட்சியாளர்களுக்கு வேறு வழி எதுவும் கிடையாது. தேர்தலுக்குப் பின் எந்தக் கட்சிக் கூட்டணி ஆட்சிக்கு வந்தாலும், மக்கள் மீது பொருளாதாரத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விடும் என்பது உறுதியாகிவிட்டது.

நிதியமைச்சகமும் பெட்ரோலிய அமைச்சகமும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையை உயர்த்தி, நிதிப் பற்றாக்குறையைக் குறைக்குமாறு ஏற்கனவே அரசுக்குப் பரிந்துரை செய்துவிட்டன. தேர்தல் காரணமாக இந்த விலையேற்றம் அறிவிக்கப்படவில்லை. தேர்தலுக்குப் பின் யார் ஆட்சிக்கு வந்தாலும் இது உடனடியாகச் செயல்படுத்தப்படும். இதன் விளைவாக அனைத்து பொருட்களின் விலையும் 5 முதல் 10% வரை அதிகரிக்கும். யானைக் காலாக பணவீக்கம் பெருகும். மக்களின் வாங்கும் சக்தி மேலும் குறைந்து உற்பத்திப் பொருட்கள் தேங்கும். பொருளாதாரம் மீளமுடியாத நெருக்கடியில் சிக்கிக் கொள்ளும் என்று முதலாளித்துவ பொருளாதாரவாதிகளே எச்சரிக்கின்றனர்.

தனியார்மயம் - தாராளமயத்தைத் தீவிரமாக்குவது, அரசுத் துறை நிறுவனங்களை தனியார் - அந்நிய நிறுவனங்களுக்குத் தாரை வார்ப்பது, உணவு தானியங்களுக்கான மானியங்களைக் குறைத்து ரேஷன் கடைகளை மூடுவது, அரசு வங்கிகளில் மக்கள் போட்டுள்ள சேமிப்புகளை குறிப்பிட்ட காலத்திற்கு திரும்ப எடுக்கத் தடைவிதிப்பது முதலான சீரமைப்புக் கொள்கைகளைத் தீவிரப்படுத்தி நெருக்கடியிலிருந்து தப்பித்து விடலாம் என்று அவர்கள் தீர்வை முன்வைக்கிறார்கள். இதுதான் தென்கிழக்காசிய நாடுகளையும், மெக்சிகோ, பிரேசில் முதலான அமெரிக்க கண்டத்து நாடுகளையும் திவாலாக்கிய பாதை. வறுமையையும் வேலையின்மையையும் மேலும் தீவிரமாக்கிய பாதை. ஏகாதிபத்திய எஜமானர்களின் கட்டளைப்படி, இம்மரணப் பாதையில் நாட்டையும் மக்களையும் தள்ளுவதற்கே இந்திய ஆட்சியாளர்கள் தயாராக உள்ளனர் என்பதையே நிலைமைகள் சுட்டிக் காட்டுகின்றன.

## இந்திய இராணுவத்தின் கூலிப் படைகள்

**வ**றுமை மிகக் கொடியது. வயிற்றுக்காக உயிருக்கே ஆபத்தான வேலைகளைப் பல உழைப்பாளிகள் செய்வதைப் பார்த்து அதிர்ச்சியும் வேதனையும் நெஞ்சைத் தாக்கும். ஆனால் அதையும் விஞ்சும் வகையில், ஒருவர் கூலிக்கு வேலை செய்யும் படைவீரனாகச் சேர்வது எவ்வளவு கொடுமையானது!

அண்மையில் நடந்த கார்கில் போரில், அண்டை நாடான பாகிஸ்தான் கூலிப்படையினரைக் கொண்டு தாக்குதல் நடத்தியதாக இந்தியா குற்றம் சாட்டியது. அவர்கள் ஆப்கானைச் சேர்ந்த இஸ்லாமிய தீவிரவாத அமைப்பின் கூலிப்படையினர் என்று கூறியது. இந்தியாவும் இதேபோன்ற இழிசெயலைச் செய்துள்ள விவகாரம் இப்போது அம்பலமாகியுள்ளது.

அண்மையில் நடந்த கார்கில் போரில் நேபாள நாட்டினரான 40,000 கூர்க்காக்கள் இந்திய இராணுவத்தால் கூலிக்கு அமர்த்தப்பட்டு போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் நேபாள கிராமங்களைச் சேர்ந்த வறிய, வேலையற்ற இளைஞர்கள். இவர்களுக்கு இந்திய நாட்டின் மீது பற்றோ, போரில் வெல்ல வேண்டும் என்ற உறுதியோ, இலட்சியமோ, சித்தாந்தமோ எதுவும் கிடையாது. இந்திய இராணுவத்தில் கூலிக்குச் சேர்ந்தால் தமது வறுமை சற்றே குறையும்; தமது குடும்பம் ஒருவேளையாவது கஞ்சி குடிக்க முடியும் என்பதால் இவர்கள் கூலிப்படையினராக வந்து சேர்கிறார்கள். போரில் இவர்கள் காயமுற்றாலோ, அல்லது மாண்டு போனாலோ இந்திய அரசு நிவாரணத் தொகை தரவேண்டியதில்லை; ஓய்வூதியமோ, சலுகைகளோ தரத் தேவையில்லை என்பதால் இத்தகைய கூலிப்படையினரை இந்தியா பெருமளவில் பயன்படுத்தி வருகிறது. கூலிப்படையினராகச் சேரும் கூர்க்காக்களும் தமது குடும்பத்தாரிடம் இறுதியாக விடை பெறுவதாகச் சொல்லி விட்டுத்தான் வருகின்றனர்.

நடந்து முடிந்த கார்கில் போரில் ஏறத்தாழ 11 கூர்க்கா படைவீரர்கள் மாண்டு போயுள்ளனர். போரில் மாண்ட இந்தியச் சிப்



படிப்பகம்

www.padippakam.com



பாய்களின் உடல்களை அவர்களது சொந்த ஊருக்குக் கொண்டு சென்று உறவினர்களிடம் ஒப்படைக்கும் இந்திய இராணுவம், கூர்க்காக்களின் உடல்களை நேபாளத்திற்கு அனுப்பவில்லை. மாறாக, காஷ்மீரிலுள்ள லே பகுதியிலேயே புதைத்து விட்டது. நேபாளத்திற்கு உடல்களை அனுப்பினால் பிரச்சினைகள் வரும் என்பதாலேயே இந்திய இராணுவம் இவ்வாறு செய்தது. ஏனெனில், கடந்த மே மாதத்தில் கார்கில் போருக்கு முன்பு எல்லையில் நடந்த மோதலில் ஒரு கூர்க்கா படைவீரர் மாண்டு போனார். அவரது உடல் நேபாளத்தின் பெகாரா மாவட்டத்திலுள்ள அவருடைய கிராமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, கிராம மக்கள் வெகுண்டெழுந்து இந்தியாவுக்கும் நேபாள அரசுக்கும் எதிராகப் போராட்டங்களைத் தொடர்ந்தனர். இந்தியா மற்றும் பிரிட்டிஷ் இராணுவத்தில் நேபாள கூர்க்காக்களைக் கூலிப்படையினராகச் சேர்ப்பதை எதிர்த்து அந்நாட்டு மக்கள் போராடத் தொடங்கியுள்ளனர்.


வெள்ளையரின் காலனி ஆட்சிக் காலத்தில் கூர்க்காக்கள் இராணுவத்தில் சேர்க்கப்பட்டு தனிப்படைப் பிரிவாக இயக்கப்பட்டனர். 1947-க்குப் பின்னர், அந்நிய நாட்டினரான நேபாள கூர்க்காக்களை இந்திய இராணுவத்திலிருந்து இந்திய அரசு திருப்பி அனுப்பவில்லை. மாறாக, வெள்ளையரிடமிருந்து பெற்ற வாரிசுரிமையாக அதே காலனியக் கொள்கையை இந்தியா பின்பற்றி வருகிறது. கூர்க்காக்களைக் கூலிப்படையினராகத் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறது. இதேபோல் பிரிட்டிஷ் இராணுவமும் கூர்க்காக்களைக் கூலிப்படையினராக இன்னமும் இயக்கி வருகிறது. நேபாள கூர்க்காக்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை இந்துக்களுக்கு எதிராகப் பயன்படுத்துவதில்லை என்ற இரகசிய ஒப்பந்தத்தை நேபாளத்துடன் இந்தியா செய்து கொண்டுள்ளது. அதன்படியே, இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் பயன்படுத்தாமல், எல்லைப்புற பகுதியில் அவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

வறுமையும் வேலையின்மையும் நேபாளத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல. இந்தியாவின் நிலைமை அதைவிட மோசமானது. இங்கேயும் இந்திய இராணுவத்தில் சேர வேலையற்ற இளைஞர்கள் போட்டி போடுகிறார்கள். அண்மையில் இராணுவத்திற்கான ஆளெடுப்பின் போது பீகாரிலும், இராசஸ்தானிலும் பெருந்திரளான கிராமப்புற இளைஞர்கள், குறைவான சிலரே தேர்வு செய்யப்பட்டு தாம் ஏமாற்றப்பட்டதை அறிந்து கலகம் செய்து போலீசின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளனர். இவர்கள் தேசப்பற்று எனும் உள்ளுணர்வால் உந்தப் பெற்று இந்திய இராணுவத்தில் சேரத் துடித்தவர்கள் அல்ல. கூர்க்கா கூலிப் படையினரைப் போன்றே வறுமைக் கொடுமையிலிருந்து மீள, ஓடிவந்த வேலையற்ற இளைஞர்கள்!

இந்திய, பிரிட்டிஷ் இராணுவங்களில் கூர்க்காக்களைக் கூலிப் படையினராகச் சேர்ப்பதை எதிர்த்து நேபாள நாட்டு மக்கள் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். இங்கே இந்தியாவில், வறுமையில் உழலும் வேலையற்ற இளைஞர்கள் இராணுவத்தில் சேரத் துடிப்பதை, கார்கில் போரினால் இளைஞர்களிடம் பொங்கி வழியும் தேசபக்தி என்று ஓட்டுக் கட்சிகளும் 'தேசிய' பத்திரிகைகளும் பிதற்றி வருகின்றன. நேபாள வேலையற்ற இளைஞனை கூலிப்படை வீரனாக்கிவிடும் வறுமை, இந்தியாவின் வேலையற்ற இளைஞனை தேசபக்த வீரனாக்குவது உலகமகா அதிசயம்தான்!

## சூறையாடும் ஜனநாயகமும் ஏழ்மையின் பெருக்கமும்

நாளொன்றுக்கு ஒரு டாலரையும் விடக் குறைவாக (ஏறத்தாழ ரூ. 42) வருவாய் ஈட்டும் மனிதனை, இன்றைய ஏகாதிபத்திய உலகம் ஏழையாக மதிப்பிடுகிறது. 600 கோடி மக்கள் வாழும் உலகில் ஐந்தில் ஒரு பங்கினர் - அதாவது 120 கோடி மக்கள் ஏழ்மை நிலையில் உள்ளதாகக் கூறும் ஏகாதிபத்தியங்கள், ஏழ்மையை ஒழிக்கப் போவதாகச் சபதம் செய்தன. இந்த ஏழ்மை ஒழிப்பு நாடகத்துக்குப் பின்னால், காட் ஒப்பந்தம், ஏழை நாடுகளை மறுகாலனியாக்குதல், செல்வாக்கு மண்டலங்களைக் கைப்பற்றுதல் என உலகையே சூறையாடத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தின. அதன் விளைவாக, உலகின் ஏழைகளின் எண்ணிக்கை குறையவில்லை. மாறாக, இன்றைய உலகின் ஏழைகளின் எண்ணிக்கை 150 கோடிப் பேரைத் தாண்டிவிட்டதாக அண்மைய புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அதேசமயம், உலகின் பெரும் பணக்காரர்களின் சொத்து மதிப்பு ராக்கெட் வேகத்தில் முன்னேறி, பூதாகரமாக வளர்ந்துள்ளது. அண்மையில் உலகின் பெரும் பணக்காரர்கள் 200 பேரின் சொத்து மதிப்பு புள்ளி விபரங்கள் வெளிவந்துள்ளது. இதன்படி, இந்த 200 பேரின் மொத்தச் சொத்துமதிப்பு 42,00,000 கோடி ரூபாய்களாகும்.



வறுமையில் தத்தளிக்கும் உலகின் 150 கோடி மக்களில் ஓர் அங்கமான மும்பய் சேரிவாழ் மக்கள். முதலாளித்துவ ஜனநாயகத்தின் 'சாதனை'!

வறுமை நாலுகால் பாய்ச்சலில் செல்ல, உலகின் முதல் 200 பணக்காரர்களின் சொத்து கடந்த ஐந்து வருடங்களில் இருமடங்கு அதிகரித்துள்ளது. உலகின் முதல் பெரும் பணக்காரனின் சொத்து 1990-இல் ரூ. 67,200 கோடியாக இருந்தது. 1995-இல் இது 96,600 கோடியாகவும், 1999-இல் 3,78,000 கோடியாகவும் வளர்ந்துள்ளது. அதாவது, 1990-ஐ ஒப்பிடும்போது இன்று 5 மடங்குக்கும் அதிகமாக அவனது சொத்து அதிகரித்துள்ளது.

உலகின் 200 பெரும் பணக்காரர்களின் மொத்தச் சொத்து மதிப்பான ரூ. 42,00,000 கோடியை, உலகின் பெரும்பாலான நாடுகளின் தேசிய வருமானம் எட்டக்கூட முடியவில்லை. 1997-இல் அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன் ஆகிய 6 பெரும் வல்லரசு நாடுகளின் தேசிய வருவாய் மட்டுமே இப்பணக்காரர்களின் சொத்து மதிப்பைத் தாண்டி நின்றது.

இன்றைய உலகின் பெரும் பணக்காரனாகிய வில்லியம் கேட்ஸ், 1991-இல் முதல் பத்து பணக்காரர் பட்டியலில்கூட இருக்கவில்லை. 1992-இல் ரூ. 27,000 கோடியைச் சொத்தாகக் கொண்டு 7-ஆவது இடத்தைக் கைப்பற்றிய இவன், 1995-இல் ரூ. 54,000 கோடியுடன் இரண்டாவது இடத்திற்கு வந்த இவன், இன்று ரூ. 3,80,000 கோடியுடன் முதலிடத்துக்கு வந்து, உலகின் முதல் கொள்ளைக்காரனாகியுள்ளான். 1995 முதலாக, தனியார்மய - தாராளமய - உலகமயமாக்கல் என்றுமில்லாத வகையில் உலகைச் சூறையாடி வருவதையே இப்பணக்காரர்களின் திடீர் வளர்ச்சி நிரூபித்துக் காட்டுகிறது.

கோடானுகோடி மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் தள்ளப்படும் கொடுமை ஒருபுறம். உலகைச் சூறையாடும் சில நூறு பணக்காரர்களின் சொத்து மதிப்பு பூதாகரமாய்ப் பெருகுவது மறுபுறம். இதுதான் பீற்றிக் கொள்ளப்படும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் 'சாதனை!'



படிப்பகம்

www.padippakam.com



## ஏழை நாட்டில் சுழலும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புயல்

தென் கிழக்காசிய நாடான இந்தோனேஷியாவில் உலக வங்கி - ஐ.எம்.எப்.க்கு எதிராக வெடித்த மக்கள் எழுச்சி இப்போது, தென்னமெரிக்க நாடான பிரேசிலில் பெரும் புயலாகச் சீறி எழுந்து வருகிறது. பரப்பளவில் உலகின் ஐந்தாவது பெரிய நாடான பிரேசிலில் கடந்த ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நடந்த மக்கள் போராட்டங்கள் தென்னமெரிக்கக் கண்டத்தை உலுக்கி வருகின்றன.

உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் கட்டளைப்படி நாட்டை மறுகாலனியாக்கி வந்த பிரேசில் அதிபர் கார்டாசோவின் ஆட்சியை முதலாளித்துவ அறிஞர்கள் உச்சி முகர்ந்து பாராட்டினர். ஆனால் கடந்த ஜனவரியில் பிரேசிலின் நாணைய மதிப்பை வீழ்த்திய ஏகாதிபத்தியங்கள், தென்கிழக்காசிய நாடுகளைப் போலவே பிரேசிலையும் சூறையாடின. அதன் விளைவாக 1994-இல் 14,800 கோடி டாலராக இருந்த பிரேசிலின் அந்நியக் கடன் இன்று 27,000 கோடி டாலராக அதிகரித்தது. சேஸ் மன்ஹாட்டன் என்ற அந்நிய வங்கி 1998-இல் ஈட்டிய இலாபத்தை போல் இருமடங்கு தொகையை 1999 ஜனவரியில் மட்டும் இலாபமாகச் சுருட்டியது. கடந்த 6 மாத காலத்தில் அந்நிய வங்கிகளும் நிதி நிறுவனங்களும் 5,000 கோடி டாலர் அளவுக்கு பிரேசிலின் செல்வத்தைச் சூறையாடின. நாணய மதிப்புச் சரிவினாலும், அந்நியக் கடன் சுமையாலும் பிரேசில் திவால் நிலையை அடைந்தது.




''உங்களைப் புதைகுழிக்கு அனுப்பும் முன். அதிபர் கார்டோ-சோவைப் புதையுங்கள்'' என்று அதிபருக்கான சவப்பெட்டியுடன் பிரேசில் மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

திவாலான நாட்டை மீட்பதாகக் கூறிக் கொண்டு ஏகாதிபத்திய வல்லரசுகளும் உலக வங்கியும் அவசரகாலக் கடன் கொடுத்து, சிக்கன சீரமைப்பு நடவடிக்கையைச் செயல்படுத்துமாறு உத்திரவிட்டன. அதன்படி தனியார்மயமாக்கல் தீவிரப்படுத்தப்பட்டு, பிரேசில் நாட்டின் 30 பெரும் வங்கிகள் அந்நியருக்குத் தாரை வார்க்கப்பட்டன. பிரேசிலின் மிகப்பெரிய அரசுத்துறை தொலைத் தொடர்பு நிறுவனமான ''டெலிபிராஸ்'' தனியார் மயமாக்கப்பட்டது. அதில் பணியாற்றிய ஆயிரக்கணக்கான ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். திவால் நிலையைக் காட்டி அரசின் சமூக நலத் திட்டங்கள் முற்றாகக் கைவிடப்பட்டன. அரசுத்துறை ஊழியர்களின் ஓய்வூதியத் தொகையும் அரசால் முடக்கப்பட்டது. அமேசான் நதி பாயும் பிரேசிலின் வடமேற்கு வளமான நிலங்கள் அனைத்தும் அந்நியர்களால் கைப்பற்றப்பட்டு பெரும் விவசாயப் பண்ணைகளாகி விவசாயிகள் நிலமிழந்து நாடோடிகளாயினர். மொத்த விளை நிலத்தில் பாதிக்கும் மேற்பட்டவை விரல் விட்டு எண்ணக்கூடிய நிலப்பிரபுக்களிடம் அந்நிய நிறுவனங்களிடமும் உள்ளன. பிரேசில் குடிமகனின் சராசரி வருவாயைவிட மக்கள் தொகையில் ஒரு சதவீதமாக உள்ள பெரும் பணக்காரர்களின் வருமானம் 45 மடங்கு அதிகமாகும்.

இக்கொடுமையான நிலையை இனியும் சகித்துக் கொண்டு வாழ பிரேசில் உழைக்கும் மக்கள் தயாராக இல்லை. தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், அறிவுத்துறையினர் என பலதரப்பட்ட உழைக்கும் மக்கள், ஒரு இலட்சத்துக்கும் மேலாகத் திரண்டு கடந்த ஆகஸ்டு 26-ந் தேதியன்று தலைநகர் பிரேசிலியாவில் நாடாளுமன்றக் கட்டிடத்தை முற்றுகையிட்டு மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். ''ஐ.எம்.எப். ஒழிக! துரோகி அதிபர் கார்டாசோ ஒழிக!'' என்றும், ''உங்களைப் புதை குழிக்கு அனுப்பும் முன்பாக, அதிபர் எப்.ஹெச்.சி. (கார்டோசா)-யைப் புதையுங்கள்'' என்றும் முழக்கமிட்டபடி, அதிபருக்கான சவப்பெட்டியுடன் ஊர்வலத்தை நடத்தியுள்ளனர். இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைக் கண்டு பீதியடைந்த பிரேசில் அரசு 8 லட்சம் டாலர் செலவில் நாடாளுமன்றத்தைச் சுற்றி அவசரமாகப் பாதுகாப்பு அரண் எழுப்பி, மக்களின் சீற்றத்திலிருந்து ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகளைக் காப்பாற்றி வருகிறது. இந்தப் போராட்டத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்புதான், பிரேசிலின் பொருளாதாரம் வலுவான அடித்தளத்துடன் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருவதாக ஐ.எம்.எப். அறிக்கை வெளியிட்டது. தமது போராட்டத்தின் மூலம் ஐ.எம்.எப்.-பின் முகத்தில் கரிபூசிய பிரேசில் மக்கள், பிரேசிலின் 'சுதந்திர' தினமான செப்டம்பர் 7-ந் தேதியன்று மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளதோடு, வரும் 2000-ஆவது ஆண்டுக்குள் பிரேசில் உட்பட அனைத்து ஏழை நாடுகளின் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஏகாதிபத்திய உலகுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

4-ஆம் பக்கத் தொடர்ச்சி

முனையில் ஒடுக்கி வருகின்றனர்.

ஆக, உலகின் மிகப்பெரிய ஜனநாயகம் தூக்கி நிறுத்தப்பட்டிருப்பது துப்பாக்கி முனையில்தான்! இன்று காஷ்மீர்; நாளை இந்தியா முழுவதும் இந்த நிலைமை வராது என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. கடந்த தேர்தலில் தமிழகத்தின் குண்டுப்பட்டி கிராம மக்கள் ஓட்டுப் போட மறுத்ததற்காக போலீசார் நடத்திய வெறியாட்டத்தை நாடே நன்கறியும்.

''துப்பாக்கிக் குழாயிலிருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது'' என்றார் தோழர் மாவோ. ''துப்பாக்கியிலிருந்து அதிகாரம் பிறக்காது; புகைதான் வரும்'' என்று போலி கம்யூனிஸ்டுகள் அன்று எகத்தாளம் செய்தார்கள். இன்று மக்களின் விருப்பத்திற்கு எதிராக, அவர்களை ஒடுக்கிவரும் துப்பாக்கியின் ஜனநாயகம் தான் அதிகாரம் செலுத்துகிறது என்பதை இம்மோசடித் தேர்தல்களே நிரூபித்துக் காட்டிவிட்டன. இழிந்த இறுதி நிலையை எட்டிவிட்ட இப்போலி ஜனநாயகத்தை வீழ்த்த, நாளை ஒரு புரட்சியில் இறங்கும் மக்களின் புதிய ஜனநாயக அதிகாரமும் துப்பாக்கிக் குழாயிலிருந்துதான் பிறக்கும்!

• மனோகர்


படிப்பகம்

# சந்தர்ப்பவாதமே ''நந்தன் வழி''யாம்!

'''பாரதி கண்ணம்மா' படத்தில் சாதிப் பிரச்சினையைத் துணிவுடன் அணுகிய வகையில் நம் கவனத்தை ஈர்த்தவர் சேரன். அடுத்து இயக்கிய 'பொற்காலம்' படமும் சேரனை வித்தியாசமான இயக்குநராக அறிவித்தது.

''அவரது சமீபத்திய படமான 'தேசிய கீதம்' சேரன் மீது நாம் வைத்த நம்பிக்கையையும், நல்ல அபிப்பிராயத்தையும் மறுபரிசீலனை செய்ய வைத்திருக்கிறது. காரணம் 'தேசிய கீதம்' படத்தில் அரசியலையும் மக்கள் பிரச்சினைகளையும் அரைவேக்காட்டுத்தனமாக அவர் அணுகியதால் மட்டுமல்ல, வேறு ஒரு காரணமும் உண்டு.

''மக்களால் நிராகரிக்கப்பட்டிருக்கும், 'தேசிய கீதம்' படத்தைத் தூக்கி நிறுத்த வேண்டி சேரன் செய்து வரும் காரியங்கள், இதுநாள் வரை அவர் பெற்றிருந்த 'சமூக சிந்தனையாளன்' என்ற நிலையை அகற்றி, சேரனும் சராசரியான சினிமா வியாபாரி தானே என்று எண்ணத் தூண்டுகிறது.''

— இவை சினிமா இயக்குநர் சேரனைப் பற்றி ''நந்தன் வழி'' பத்திரிக்கையில் வந்த கட்டுரையின் தொடக்கப் பத்திகள்.

தொடர்ந்து, சேரனின் 'தேசிய கீதம்' ஒரு ஆங்கிலத் திரைப்படத்தின் தழுவல்; இருந்தபோதும், அது மக்களின் வாழ்க்கைத் தேவைகளை உணர்ந்த ஒருவர்தான் முதல் அமைச்சராக இருக்க வேண்டும் என்ற வகை நியாயமான கோபம், நியாயமான எதிர்பார்ப்பை வெளிப்படுத்துகிறது; அதேசமயம் பிற்படுத்தப்பட்ட மக்களைக் கொள்ளைக்காரர்களாக இழித்துக் காட்டி, இட ஒதுக்கீட்டை ரத்து செய்யக் கோருகிறார்; இதன்மூலம் காங்கிரசு பாரம்பரிய மிக்க குடும்பத்தைச் சேர்ந்த சேரன் பண்ணையார்த்தனமான தனது பார்வையை வெளிப்படுத்துகிறார். நடிகர் ரஜினியைப் புகழ்ந்து அவரிடம் இருந்து 'தேசிய கீதம்' படத்தைப் பாராட்டிக் கடிதம் பெற்று விளம்பரம் செய்கிறார்; 'குமுதம்' பத்திரிக்கை பேட்டி மூலம், ரஜினி என்ற அரிதார மனிதரிடம் தமிழகத்தையே அடகுவைக்க ஆசைப்படும் அற்பமானவராக இருக்கிறார் என்று போகிறது ''நந்தன் வழி.''

இறுதியில், ''கதர்ச் சட்டை போடாத காங்கிரசுக் காரராக சேரன் இருந்துவிட்டுப் போகட்டும். நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் ரஜினியின் பாராட்டு பத்திரத்திற்காக, அல்லது வேறு ஏதோவொரு காரணத்துக்காக இடஒதுக்கீட்டை ரத்து செய்யக் கோருவதையும் அவரை வளர்ந்துவிட்ட மக்களையே இழிவாகக் காட்டுவதையும் அனுமதிக்க முடியாது. சேரன் இதை உணர வேண்டியது அவசியம்'' என்று முடிகிறது, ''நந்தன் வழி'' கட்டுரை.

சேரன் ஒரு ''வித்தியாசமான இயக்குநர்'', ''சமூகச் சிந்தனையாளன்'' என்கிற முந்தைய ''நந்தன் வழி'' மதிப்பீடு தேசிய கீதத்துக்குப் பிறகு மறுபரிசீலனைக்குள்ளாகியது; ''சேரனும் சராசரியான ஒரு சினிமா வியாபாரி'', ''அற்பமானவர்'', ''முரண்பாடுகளின் மொத்த உருவம்'', ''பண்ணையார்த்தனமான பார்வைக்காரர்'' என்று மாறிவிடுகிறது.

இப்படியாக, இராமதாசு, ம.தி.மு.க. வைக்கோ, கடைசியாக விடுதலைச் சிறுத்தைகள் திருமாவளவன் வரை பலரைப் பற்றிய முந்தைய ''நந்தன் வழி'' மதிப்பீடுகள் மாறிப் போயிருக்கின்றன.


தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளிலேயே தனக்கு அணுக்கமானவை, தான் ஆதரிக்கத்தக்கவை என்று ''நந்தன் வழி'' தீர்மானித்திருந்தவை ராமதாசின் பா.ம.க. வும்., வைக்கோவின் ம.தி.மு.க.வும்தாம். இவ்விரு கட்சிகளின் அணி சேர்க்கை காரணமாக ''நந்தன் வழி'' இப்போது இதை மறுத்தாலும் இது மூடி மறைக்கவே முடியாத உண்மை.

''டாக்டர் இராமதாஸ், தன் மனதில் பட்ட எதையும் உடனடியாக வெளிப்படுத்தி விடுபவர். திராவிடக் கட்சிகள் தமிழ் இன, மொழி நலன்களைப் புறக்கணித்து விட்ட நேரத்தில் அதைக் கையில் எடுத்துக் கொண்டவர். சாதிய அடிப்படையில் கட்சி ஆரம்பித்து அதை தேசிய இனக் கட்சி அளவுக்கு வளர்த்தெடுத்தவர்.

வஞ்சகம், சூழ்ச்சி, முதுகில் குத்தும் அரசியல் இவற்றையெல்லாம் புறந்தள்ளி நேர்மையான அரசியல் நடத்துபவர். இப்படித்தான் இவரைப்பற்றி அரசியலாளர்களும், இதழியலாளர்களும் கருத்து வைத்துக் கொண்டிருந்தனர். அது ஒரு காலம்: இப்போதெல்லாம் டாக்டரின் அரசியல் புரியாத புதிராக உள்ளது. நேர்மையான அரசியலைக் கை நழுவ விடுகின்றாரோ என்ற ஐயம் எழுகிறது'' - இது ''நந்தன் வழி'' பா.ம.க. ராமதாஸ் பற்றிய தனது முந்தைய மதிப்பீட்டை பொதுவாக அரசியலாளர்கள் இதழியலாளர்கள் மேல் ஏற்றிச் சொல்லுவதும், தனது இப்போதைய மதிப்பீட்டை நாசுக்கான ஐயமாக எழுப்புவதும் ''நந்தன் வழி''.

ஈழ அகதிகளுக்கு மறுவாழ்வு, தனித் தமிழீழ ஆதரவு, காவிரி பிரச்சினையில் நடுவர் மன்றத் தீர்ப்பு அமலாக்கம், தமிழ் ஆட்சி மொழிக் கோரிக்கை, இட ஒதுக்கீட்டு வெள்ளை அறிக்கைக் கோரிக்கை என ''நந்தன் வழி''க்கு உகந்த முறையில் பேசினார் இராமதாசு. ஆனால், ஈழ ஆதரவு - தீவிரவாதக் குழுக்களுக்கு ஆதரவில்லை என்று பிரபாகரன் - புலிகள் பற்றிய கோள்விகளைத் தவிர்த்தது, 356-ஐப் பயன்படுத்தி தி.மு.க. அரசைக் கலைக்கச் சொன்னது, ஊழல் வழக்கில் ஜெயா - சசி கும்பலுக்கு ஆதரவான நிலை ஆகிய காரணங்களுக்காக, ''டாக்டர் இராமதாஸ் புரியாத புதிர்'' என்று கடந்த ஆண்டு மறுமதிப்பீடு செய்தது ''நந்தன் வழி.''

அதன்பிறகு, வாழப்பாடி, வைக்கோவுடன் போட்டி போட்டுக் கொண்டு பா.ஜ.க.வின் மிகவும் நம்பகமான விசுவாசியாக இராமதாசு மாறினார்; பீகாரில் ராப்ரிதேவியின் ஆட்சிக் கவிழ்ப்பை ஆதரித்தார்; ஒரிசாவில் பாதிரியார் எரிப்பு, ம.பி.யில் கன்னித் துறவிகள் கற்பழிப்பு, குஜராத்தில் கிறித்தவர் மீதான தாக்குதல் போன்றவற்றிற்கு பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். காரணமல்ல, அவற்றிற்கு எதிர்க் கட்சிகளின் சதியே காரணம் என்றார்; தொழிலாளர்கள் போராடக் கூடாது, உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று உபதேசித்



**இராமதாசு, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் விசுவாசியாக மாறிய பின்னும், தாழ்த்தப்பட்டோர் மீது தாக்குதல் நடத்திய வன்னியர்களுக்கு வக்காலத்து வாங்கிய பின்னும் தொழிலாளர்கள் போராடக் கூடாது என உபதேசித்த பின்னும் அவரைப் பற்றிய ''நந்தன் வழி''யின் மதிப்பீடு ஈரோட்டமாகவே இருக்கிறது.**



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

தார். தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தாக்குதலில் வன்னியருக்கு வக்காலத்து வாங்கினார்; ஓட்டுப் போடாதவர்களைத் தண்டிக்க வேண்டும் என்றார். பா.ஜ.க. - தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டு இருக்கும் போதே அ.தி.மு.க. - காங்கிரசுடன் அணி மாறுவதற்கும் வாய்ப்பை மறுக்கவில்லை. கடைசியாக தலித் எழில்மலை, திருமாவளவன், பத்திரிக்கை நிருபர்களை எல்லாம் நிதானமின்றி ஏகவசனத்தில் ஏசுமளவுக்குப் போயிருக்கிறார். இத்தனைக்கும் பிறகு ''நந்தன் வழி'' மதிப்பீடு ஈரோட்டமாகவே இருக்கிறது.

''கடுமையான உழைப்பு, உணர்ச்சிகரமான பேச்சு, தனிமனித ஒழுக்கம் இவை தான் தி.மு.க.வில் வைக்கோவிற்கு ஒரு தனியிடம் பெற்றுத் தந்தவை'' என்று துவங்கும் ''நந்தன் வழி'' தொடர்ந்து அவரது அருமை பெருமைகளை அடுக்கியது. ''தமிழகம் முழுவதும் புகழ்பெற்ற அரசியல்வாதியான வைக்கோ, ஈழம் சென்று வந்தபின் புகழ் உலகத்துக்குச் சென்றது; கட்சிக்குள்ளும் வெளியிலும் இருந்த விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், வைக்கோவை தமிழ்நாட்டின் விடுதலைப் புலியாகவே கண்டனர்; கட்சி சாராத படித்த நடுத்தர மக்களிடம் அவர் செல்வாக்கு விரைந்து கூடியது. வி.பி. சிங் அமைச்சரவையில் மாறனுக்கு பதில் வைக்கோ சேர்க்கப் பட்டிருக்க வேண்டும்; ராஜீவ் உட்பட நான்கு பிரமதர்களுடன் தில்லியில் வாதிட்டவர். கடும் பனி கொட்டிய போதும் தில்லி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு புலிகளின் ஒலி, ஒளி நாடாவைப் போட்டுக் காட்டி உண்மையை உணர்த்த உழைத்தார்; பிறகு வைக்கோவின் வளர்ச்சியே அவருக்கு எதிரியாகி, புலிகள் மீதும் வைக்கோ மீதும் பொய்யான கொலைப் பழியை சுமத்தி அதன் விளைவாக ம.தி.மு.க. என்ற தனிக்கட்சி உருவாக்கினார்'' என்று வைக்கோவின் வளர்ச்சியை தொகுத்தது ''நந்தன் வழி.''

அவர் ஜெயலலிதாவுடன் கூட்டு சேர்ந்த பிறகு, ''இப்போது நீங்கள் செய்திருப்பது (கலைஞர் இந்திராவுடன் கூட்டுச் சேர்ந்ததைப் போன்று) அதே அளவு மோசமான சந்தர்ப்பவாத அரசியல்!'' என்றது. ''மக்களை முட்டாளாக்கி, மக்களின் மறதியை மட்டுமே ஆதாரமாக்கி நீங்கள் நடத்தும் அரசியலுக்கெல்லாம் 'ராஜ தந்திரம்' என்று நீங்களே பெயர் சூட்டிக் கொள்வதை நிறுத்துங்கள்'' என்றது. ''கப்பல் திசைமாறிப் போய்விட்டது. ம.தி.மு.க. என்பது மறுமலர்ச்சி தி.மு.க.வாக அல்லாமல் மறுபடியும் தி.மு.க. என்றாகிவிட்டது'' என்று கணித்தது ''நந்தன் வழி.'' இன்றும் ஜெயலலிதா ஆட்சியை அகற்ற நடைபயணம் போன வைக்கோவின் கால்களையும், கூடவே நடந்த ஓராயிரம் தொண்டர்களின் கால்களையும் ஜெயலலிதாவின் சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டும் என முழங்கிய வைக்கோவின் நாவையும் அதைக் கேட்டு பூரித்த இலட்சக் கணக்கான காதுகளையும் வைக்கோதான் திராவிடத்தின் திருவிளக்கு, ஆரியத்தின் சாவு மணி என்று நம்பி தீக்குளித்தவரையும் மறந்துவிட்டு ஜெயாவுடன் ஒரே மேடையில் ஏறலாமா என்று உருக்கமாகக் கேட்டு ''சிந்தித்துப் பாருங்கள்... நீங்கள் செய்வது சரிதானா?'' என்று மன்றாடியது ''நந்தன் வழி.''

ஆனாலும் தான் செய்தது சரிதான் என்று அதே பாதையில் போனார் வைக்கோ. இருந்தபோதும், வைக்கோவிடம் ''மீண்டும் மறுமலர்ச்சி''யை கண்டது ''நந்தன் வழி''. அதை 98 ஜூலையில் அட்டைப்படக் கட்டுரையாகவும் வரைந்தது.

அரசியல் சட்டம் 356-ஐப் பயன்படுத்தி தி.மு.க. அரசைக் கலைக்கும்படி பா.ஜ.க. கூட்டணி அரசை அப்போது ஜெயலலிதா நிர்பந்தித்துக் கொண்டிருந்தார். ''ம.தி.மு.க. 356-ஆவது பிரிவைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்கவில்லை. கேட்கமாட்டோம். இதுதான் எங்கள் கொள்கை என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்லி விட்டார் வைக்கோ. அதிர்ந்து போனது அ.தி.மு.க. வட்டாரம் மட்டுமல்ல, தமிழக அரசியலும்தான்.'' தமிழக அரசு கொண்டு வந்த ''பொடா'' சட்ட முன்வரைவை ம.தி.மு.க. எதிர்த்தது; தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்ற தமிழக அரசு உத்தரவை அகோபில மடத் தலைவர் கண்டித்தபோது, அதற்கு எதிராக ம.தி.மு.க. அதிகாரப்பூர்வ ஏடு தலையங்கம் எழுதியது; பா.ஜ.க. அரசில் பங்கேற்காமல் பிரச்சினைக்கு ஏற்ப ஆதரவோ, எதிர்ப்போ தெரிவிப்பது ம.தி.மு.க.வுக்கு குறிப்பாக வைக்கோவுக்கு தில்லியில் ஒரு நல்ல பெயரைக் கொடுத்து வருகிறது; ஈழப் பிரச்சினை, காவிரி - பெரியாறு அணை போன்ற தமிழக உரிமை பிரச்சினைகளில் வைக்கோவின் அக்கறையும் பேச்சும் தமிழக மக்களிடம் அவருக்கு நல்ல மதிப்பை உருவாக்கி வருகிறது. பெரியார், தனித்தமிழ், ஈழம் போன்றவைகள் பற்றி பயிற்சிப் பாசறை நடத்தி அமைப்புப் பணிகளைச் சரியாக செய்து வருகிறார்'' என்று தொகுத்தது, ''நந்தன் வழி.''

''நாற்காலி ஆசைக்காக கொள்கையிலிருந்து தடம் மாறிப்போய் மறுமலர்ச்சி தி.மு.க., மற்றொரு தி.மு.க.வாகிவிட்டது என்ற விமர்சனங்களை தாண்டி மீண்டும் மறுமலர்ச்சி தி.மு.க.வாக மாறி வருவது கண்கூடாகத் தெரிகிறது'' என்று அகமகிழ்ந்து போன ''நந்தன் வழி'', தமிழ்நாட்டில் மூன்றாவது சக்தியாக வைக்கோ உருவாவார் என்று ஆருடம் சொன்னது. அதன் பிறகு வைக்கோவும், ராமதாசும் ஓரணியாக இணைந்து மூன்றாவது அணியாக உருவெடுக்கும் என்று கணித்தது, ''நந்தன் வழி.''



வை.கோ., பார்ப்பன - பாசிஸ்டுகளான ஜெயா, பா.ஜ.க.வுடன் கூட்டணி கண்டவுடன், ''ம.தி.மு.க. என்பது மறுமலர்ச்சி தி.மு.க.வாக அல்லாமல் மறுபடியும் தி.மு.க. என்றாகிவிட்டது'' எனக் கணித்தது ''நந்தன் வழி.'' ஆனாலும், சிறிது காலம் கழித்து, வை.கோ. தனது பாதையை மாற்றிக் கொள்ளாத போதும், நந்தன் வழி, தனது கணிப்பை ஒதுக்கி விட்டு, அவரிடம் ''மீண்டும் மறுமலர்ச்சி'' யைக் காண்பதாகப் பிதற்றியது.

அடுத்து, விடுதலை சிறுத்தைகள் திருமாவளவன் அரசியல் பற்றி ''நந்தன் வழி'' சிறப்பாசிரியர் சுப. வீரபாண்டியன் எழுதுகிறார் - தோற்றம், பாவனை, பேச்சு, அதில் ஒலித்த உண்மை கோபத்தால் ஈர்த்தாராம் திருமாவளவன். தமிழ்த் தேசியம், தலித் தலைமை போன்ற கோட்பாடுகளில் தமக்கும் அவருக்கும் இடையே சிலவற்றில் கருத்து ஒற்றுமையும் உண்டு. கருத்து முரண்பாடும் உண்டாம். எனினும், ''தேர்தலின் பக்கம் திரும்பக் கூடாது என்பதில், எங்களைப்போன்ற இயக்கங்களுக்குள் ஓர் உறுதி இருந்தது.'' ''இப்போது திடீரென்று விடுதலைச் சிறுத்தைகள் தேர்தலில் பங்கேற்கப்போகும் செய்தியை நாளேடுகளில் படித்தபோது, அதிர்ச்சியாய்த்தான் இருந்தது. அதுவும் முதலில் ஜெயலலிதாவோடு, திருமாவும் நண்பர்களும் நிற்கும் புகைப்படம் வெளியானது. பிறகு, மூப்பனாரின் மூன்றாவது அணியில் அவர்கள் இணைந்து கொண்டதாய் அறிவிப்பு வந்துள்ளது.''

''இதோ, இந்த நாட்குறிப்பை எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில், வழக்குரைஞர் பி.வி. பக்தவச்சலம், புதிய தமிழகத்தின் திருநெல்வேலி வேட்பாளராய் அறிவிக்கப்பட்டுள்ளார்.''

''இவர்கள் எல்லோரையும் தேர்தல் அரசியல் எப்படி கவர்ந்தது என்று எனக்குப் புரியவில்லை.''

''மனோன்மணீயத்தில், 'நெருப்பை அரிக்குமோ கரையான்? என்று ஒரு வரி உண்டு. நானும் அப்படித்தான் கணக்குப் போட்டிருந்தேன்.''

''என் கணக்கில் எங்கோ பிழையிருக்


படிப்பகம்

www.padippakam.com

கிறது'' என்று முடிக்கிறார், சுப. வீரபாண்டியன்.

இவ்வளவுதானா திருமாவளவன் கொடுத்த அதிர்ச்சி? மூப்பனாரைப் பற்றி அவரும் ''நந்தன் வழி''யும் சொன்னவற்றைத் தொகுத்து இப்போது திருமாவளவன் உதிர்ப்பவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டால் இன்னும் பல கணக்குகள் பிழையாவதைக் காணலாம். தங்களாலேயே முடியாமலிருந்த தலித் ஒற்றுமையைக் கட்டி, தன்னையே நல்வழிப் படுத்திய மாபெரும் தலைவராக இப்போது மூப்பனார் திருமாவுக்குத் தெரிகிறார். சிறுத்தைகளைச் சைவப் பூனைகளாக்கி விட்டதாக மூப்பனார் வேறு கூறிக் கொள்கிறார். இதே மூப்பனாரைத்தான், ''அவர் தலித்துகள் வீட்டில் சாப்பிட்டாராம். தலித் வீட்டில் என்ன பன்றிகளின் உணவையா சாப்பிட்டார்?'' என்று அப்போது கேட்டார். தலித் தலைமைக்காகச் சண்டைபோட்டவர் பார்வத குல பண்ணையார் தலைமையின் கீழ் சுருண்டுவிட்டார். சேரன், இராமதாசு, வைக்கோ, பி.வி. பக்தவச்சலம், திருமாவளவன் இப்படி ''நந்தன் வழி'' கணக்கு பிழையெனக் காட்டியவர்களின் பட்டியல் நீளமானது. இதற்குக் காரணம் அந்த நபர்கள், அவர்களின் நடவடிக்கைகள், அவர்களின் இயக்கங்கள் மாறிப் போய் விட்டது மட்டுமல்ல. ஒரு சினிமாக் காரனைப் பற்றி ரசிகனும், ஒரு எழுத்தாளனைப் பற்றி வாசகனும், ஒரு தலைவனைப் பற்றித் தொண்டனும் தனது கணக்குப் பிழையாகிப்போய்விட்டது என்று சொல்லலாம். ஆனால் ஒரு பேராசிரியரும் இயக்கத் தலைவரும், வெறும் பத்திரிக்கை அல்ல இயக்கமென்று சொல்லிக் கொள்ளுபவர்கள் அப்படி சொல்ல உரிமை உண்டா? இவர்கள் பிழையான கணக்குப்போட்டு தனக்குள் மட்டும் வைத்துக் கொள்ளவில்லை. அதைப் பிரதியெடுத்து பல ஆயிரம் பேருக்கு விநியோகிக்கும்போது அவர்களுக்கெல்லாம் பொறுப்பாக பதில் சொல்ல வேண்டாமா? இனி மேலும் ''நந்தன் வழி'' கணக்குகள் சரியாக இருக்கும் என்பதற்கு என்ன உத்திரவாதம்?

நபர்களை, நடவடிக்கைகளை, இயக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு - கணக்குப்போடுவதற்கு ''நந்தன் வழி''யில் அடிப்படைக் கருவி என்ன? பெரியாரியமா? அம்பேத்கரியமா? மார்க்சியமா? இவற்றில் ஏதாவது ஒன்றா? இல்லை இப்போது பல ''அறிஞர்கள்'' கண்டுபிடித்திருப்பதைப்போல் பெரியாரியம் - அம்பேத்காரியம் இவற்றோடு இந்த மண்ணுக்கேற்ற மார்க்சியம் ஆகியவற்றின் சேர்க்கையா? இந்தச் சேர்க்கை சாத்தியமா? அப்படி சேர்ந்து எப்போதாவது சரியாகக் கணக்குப் போட்டதுண்டா? இவற்றில் பெரியாரியத்துக்கும் அம்பேத்கரியத்துக்கும் ஒரு ஒருங்கிணைந்த பார்வை என்று ஏதாவது உண்டா? இவ்விரண்டின் மூலவர்களுடைய கணக்குகளே பிழையாகிப்போனதாக அவர்களே ஒப்புக் கொண்டுவிடவில்லையா?



திருமாவளவன் மூப்பனாருடன் கூட்டணி சேர்ந்து தேர்தலில் நின்றபின், ''என் கணக்கில் எங்கோ பிழையிருக்கிறது'' என்று ''நந்தன் வழி'' யில் எழுதினார் சுப.வீ. ஒரு தலைவனைப் பற்றி தொண்டன், ''தனது கணக்குப் பிழையாகி விட்டது'' என்று சொல்லலாம். ஆனால், வெறும் பத்திரிகை அல்ல, இயக்கமென்று சொல்லிக் கொள்ளுபவர்கள் அப்படிச் சொல்ல உரிமை உண்டா?

மார்க்சிய - லெனினியத்தை ஆயுதமாக ஏந்தியிருப்பவர்களின் கணக்கு பிழையாகிப்போனதே இல்லை என்று கூறவில்லை. அப்படிப் பிழையாகிப்போன போதெல்லாம், அதற்கான அடிப்படையை - காரணங்களை ஆழமாக பரிசீலிப்பதும், சுயவிமர்சனத்தோடு திருத்திக் கொள்வதும்தான் நடைமுறையாக உள்ளது. திரிபுவாதிகளான போலிக் கம்யூனிஸ்டுகள்தாம் சந்தர்ப்பவாதமாகக் கணக்குகள் போடுவதும், பிழையாகிப்போன பின்னும் நியாயப்படுத்துவதும் செய்கிறார்கள். இதுதான் ''நந்தன் வழி'' என்பதற்கு சுப. வீரபாண்டியனே சான்றாக இருக்கிறார்.

''கலைஞர் மு. கருணாநிதி, வைக்கோ, இராமதாசு அய்யா அடுத்ததாக நாம் யாரை நம்பி ஏமாறுவதற்குக் காத்திருக்கிறோம்?'' என்று ஒரு வாசகர் கேள்வி கேட்கிறார். ''யாரையாவது நம்பி, ஏமாந்தே தீர வேண்டும் என்று தமிழர்கள் உறுதியாக இருக்கும் போது, அடுத்தும் சில தலைவர்கள் கிடைக்காமலா போய் விடுவார்கள்? விடுங்கள் கவலையை.'' என்று ''சுபவீ விடைகள்'' எழுதுகிறார். (ஏறக்குறைய ஒவ்வொரு ''துக்ளக்'' இதழிலும் ''சோ'' கூறும் அதே பதில்.) இத்தகைய நம்பிக்கையை ஏற்படுத்துவதில் ''நந்தன் வழி'' சுபவீக்கு ஒரு துளி பொறுப்பும் இல்லாதது போலவும், பொதுவாகத் தமிழர்கள் தாமே நம்பி ஏமாந்துபோவது போலவும் கிண்டலடித்து நழுவுவதுதான் சரியான அணுகுமுறையா? தமிழர்களை நம்ப வைத்து ஏமாற்றியதில் ''நந்தன் வழி'' ''சுபவீ''க்களுக்குள்ள பங்கு ஒரு புறமிருக்கட்டும், தாமே நம்பி ஏமாந்து போனதை வெளிப்படுத்தும் நேர்மையாவது இருக்கிறதா?

''கட்சிக்குள்ளும், வெளியிலும் இருந்த விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், வைக்கோவைத் தமிழ்நாட்டின் விடுதலைப் புலியாகவே கண்டனர்'' என்று எழுதிய ''நந்தன் வழி சுபவீ'' யிடம் ஒரு வாசகர் கேட்கிறார் ''புரட்சிப்புயல் பட்டம் இனியும் பொருந்துமா?'' அதற்கு அவர் திருப்பிக் கேட்கிறார், ''எப்போது பொருந்தியது?'' அதே இதழில் நெல்லை அதிமுக மாநாட்டைப் பற்றி ''பொய்க்கால் புலிகள் இலைக்குமுன் ஒடுங்கின. வீரவசன வியாபாரம் வேகமாய் நடந்தது'' என்கிறார்.

மக்களின் மறதியை மூலதனமாக வைத்துக் கொள்ளை இலாபம் அடைவது ஓட்டுக்கட்சிகளின் அரசியல். வாசகர்களின் மறதியை மூலதனமாக வைத்துப் புது வகைத் தொழிலாக அரசியல் நடத்துவதுதான் ''நந்தன் வழி.'' இந்த உண்மையைச் சுட்டிக்காட்டும் போது, ஓட்டுக் கட்சிகளைப்போல சந்தர்ப்பவாதத்தையே தமது அரசியல் கொள்கையாக பிரகடனப்படுத்தி கொள்கிறது ''நந்தன் வழி''. ஓட்டுக் கட்சிகள் தாம் முரண்படும் கட்சிகளோடு கூட்டு வைத்துக் கொள்ளுவதைப் பற்றி கேட்கும் போது, ''நிபந்தனையற்ற ஆதரவு கிடையாது; பிரச்சினைகள் அடிப்படையில் தான் ஆதரவு'' என்றும், ''கூட்டணி கிடையாது, தொகுதி உடன்பாடுதான்.'' என்றும் தங்கள் சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்துகிறார்கள். அதுதான் ''நந்தன் வழி''யும் ''வைக்கோவிற்கோ அல்லது வேறு எந்தக் கட்சியினருக்கோ விமர்சனமற்ற ஆதரவை எப்போதும் நாம் அளித்ததில்லை. சரியான நிலைப்பாடுகளை எடுக்கும் தருணத்தில், வைக்கோவை மட்டுமின்றி, எந்தத் தலைவரையும் நாம் பாராட்டவும் தயங்கியதில்லை. இதுதான் நந்தன்வழி. நான் மதிக்கும் 'புதிய ஜனநாயகம்' இதனைப் புரிந்து கொள்ளும் என்று நினைக்கிறேன்'' என்று ''நந்தன் வழி சுபவீ'' எழுதுகிறார்.

புரிந்து கொள்ளுகிறோம்! அதனால் தான் வாஜ்பாயின் ''ஈழ ஆதரவு'' நிலையையும், பால்தாக்கரேயின் தனி ஈழ ஆதரவு நிலையையும், ஜார்ஜ் பெர்னாண்டசின் உறுதியான ஈழவிடுதலை நிலையையும் நந்தன் வழி ''பாராட்டுகிறது!'' கடந்த ஆண்டு ஜூனில், ஜெயலலிதா, இராமதாசு, வைக்கோ, தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் 27 பேர் கையொப்பமிட்டு ஈழப்பிரச்சினை, கச்சத்தீவு உரிமை குறித்து பிரதமர் வாஜ்பாயிடம் கோரிக்கை விண்ணப்பம் கொடுத்தனர். அது குறித்து, ''கால தாமதம் என்றாலும் நேரில் வற்புறுத்தி


படிப்பகம்

www.padippakam.com

எடுத்துரைக்க முன்வந்த ஜெயலலிதா பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியவராகி நார். சீரிய இச்செயல்பாடு நிறைவேற பெரும்பங்கு வகித்திருக்கக் கூடிய டாக்டர் இராமதாஸ், வைக்கோ ஆகியோரையும் நாம் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம்'' என்று தலையங்கம் தீட்டியது ''நந்தன் வழி.''

''புதிய ஜனநாயக''த்தைப் போலவே, ''நந்தன் வழி''யைப் புரிந்து கொள்ளத் தவறிய ''நந்தன் வழி'' வாசகர் சைமன் சக்காப், ''ஜெ.வையெல்லாம் பாராட்டி அசிங்கம் பிடித்த தலையங்கங்களை எழுதக் கூடாது என்று தாழ்மையுடன் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறோம்'' என்று கடிதம் எழுதினார்.

அதே ''நந்தன் வழி'' இதழ் குறித்து, ''அரசைக் கலைக்கக் கலவரத்தைத் தூண்டும் ஜெ. என்ற தலைப்பில் வந்த அட்டைப் படக் கட்டுரையில் ஜெ.ன் அரசியல் பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தி எச்சரிக்கையாக இருப்பது நல்லது என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் தலையங்கத்தில் ஜெயலலிதாவின் அரிய முயற்சி - உரிய நேரத்தில் என்று பாராட்டும், வாழ்த்தும் கூறியுள்ளீர்கள். ஏன் இந்த கீழ்த்தரமான கண்ணோட்டம்?'' என்று ''நந்தன் வழி'' வாசகர் நா. சந்திரசேகர் எழுதினார்.

1998 நாடாளு மன்றத் தேர்தல் முடிந்ததில் இருந்து பா.ஜ.க கூட்டணி அரசைக் கவிழ்த்த வரை தமிழ்நாட்டு நலனுக்கானவை, இந்திய நாட்டு நலனுக்கானவை என்று எவ்வளவோ கோரிக்கையை ஜெயலலிதா எழுப்பினார். அவையெல்லாம் உண்மை அல்ல; தி.மு.க. ஆட்சியைக் கலைக்கவும், தன்மீதான ஊழல் வழக்குகளில் இருந்து விடுபடவும் வாஜ்பாய் அரசுக்குக் கொடுத்த மறைமுக மிரட்டல், மற்றபடி ஜெயலலிதாவின் கோரிக்கைகள் எல்லாம் வெறும் நாடகம் தான் என்பது நாடே அறிந்த உண்மை. இருந்தும் ஈழத் தமிழருக்காகவும், கச்சத் தீவு உரிமைக்காகவும் ஜெயலலிதா மேற்கொள்வது மட்டும் உரிய நேரத்தில் அரிய முயற்சியாக ''நந்தன் வழி''யில் தெரிகிறது.

இதே ஜெயலலிதாதான் அடுத்த சில மாதங்களிலேயே கடற்படைத் தளபதி விஷ்ணுபகவத் விவகாரத்தில் ஜார்ஜ் பெர்ணாண்டசின் புலிகள் ஆதரவு நிலைக்கு எதிரானவர் என்பதால் நீக்கப்பட்டதாகக் குற்றஞ் சாட்டினார். ஜெயலலிதா மட்டுமல்ல; பால்தாக்கரே, வாஜ்பாய் போன்ற இந்துவெறி பாசிஸ்டுகள் ஈழத் தமிழர் மீது காட்டும் கரிசனை எந்த அடிப்படையிலானது, எந்த அளவு உண்மையானது என்பது ''நந்தன் வழி''க்கு முக்கியம் இல்லை. வாஜ்பாயிடம் கொடுக்கப்பட்ட மனுவிலேயே இந்துக்களாகிய ஈழத்தமிழர்கள் பௌத்தர்களாகிய சிங்களர்களால் கொல்லப்படுவதால் இந்திய அரசு தலையிட்டு நிறுத்த வேண்டும் என்கிற அடிப்படையில் தான் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி ''நந்தன் வழி''க்குக் கவலை இல்லை. புலிகளே இதைச் சொல்லி ஆதரவு பெறத் தயாராக இருக்கும்போது பிறகென்ன? இன்னும் தமிழ்வழிக் கல்வி, மரண தண்டனை எதிர்ப்பு இயக்கங்களுக்கெல்லாம் பாரதீய ஜனதா ஆதரவையும் உண்மைதானென்று நம்பி ஏற்றுக் கொள்கின்றனர். இடஒதுக்கீடு — சமூகநீதியைக் கூட அதிகார பூர்வமான முறையில் பா.ஜ.க. ஆதரிக்கிறது; இன்னும் ஒருபடி மேலேபோய் ''இந்துத்துவா''வில் திராவிட தமிழ்ப் பண்பாடும் அடங்கும் என்று அறிவித்துவிட்டார்கள்.



**ஜெயா, இராமதாசு, வை.கோ.வுடன் சேர்ந்து ஈழப் பிரச்சினை, கச்சத்தீவு உரிமை குறித்து வாஜ்பாயிடம் கோரிக்கை மனுகொடுத்த பொழுது, ஜெயாவைப் பாராட்டி ''நந்தன் வழி'' தலையங்கம் எழுதியது. ''நல்லது செய்தால் ஆதரிப்பது; தவறு செய்தால் விமர்சிப்பது'' என்ற இந்த ''நந்தன் வழி''யை, அதன் வாசகர்களே ''அசிங்கமான தலையங்கங்கள்'' என்றும் ''கீழ்த்தரமான கண்ணோட்டம்'' என்றும் விமர்சித்தனர்.**

அதேபோல காவிரி நீர், இடஒதுக்கீடு - சமூகநீதி, சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு, தமிழ் ஆட்சிமொழி, மதச்சார்பின்மை என்று பல விவகாரங்களிலும் ஜெயலலிதாவின் அறிவிக்கப்பட்ட நிலை ''நந்தன் வழி''யோடு ஒத்துப்போகிறது. இவற்றில் எல்லாம் பாராட்ட வேண்டியதைப் பாராட்டுவது, எதிர்த்து விமர்சிக்க வேண்டியதை எதிர்ப்பதுதான் ''நந்தன் வழி''யா? இல்லை, எந்த நபர், எந்த இயக்கமானாலும் அதன் அறிவிப்புகள், நடவடிக்கைகளையும் ஆழமாகவும், ஒருங்கிணைந்த முறையிலும் பரிசீலித்து முடிவெடுக்காதா? இல்லை, அப்படிச் செய்வது கூடாது. ஆழமாகவும் ஒருங்கிணைந்த முறையிலும் பரிசீலிப்பதும், மதிப்பீடு செய்வதும் சந்தர்ப்பவாத அரசியலுக்கு வசதியாக இருக்காது என்பதுதான் ''நந்தன் வழி''. இது ''நந்தன் வழி'' மட்டுமல்ல; பெரியாரிய, அம்பேத்காரிய - தமிழினவாத, தலித்தியவாதிகளின் போலிக்கம்யூனிச - போலிமார்க்சிய - போலிப் புரட்சியாளர்களின் நிலையும் இதுதான்.

எனவேதான், புதிய ஜனநாயகத்தின் ஆழமான, ஒருங்கிணைந்த, உறுதியான நிலைப்பாடுகளுக்கு முகங்கொடுக்க முடியாத அவர்கள், ''புதிய ஜனநாயகம்'' மீது பரிசுத்தவாதிகள், பார்ப்பனிய தூய்மைவாதிகள், கடிக் கம்யூனிஸ்டுகள், குறுங்குழுவாதிகள், தான் மட்டும் எப்போதும் சரி என்கிற ஆணவக்காரர்கள் என்று அவதூறு பரப்புகிறார்கள்.

அதையே வேறுமாதிரிச் சொல்லுகிறது,''நந்தன் வழி.'' ''தம்மையும் தம் செயல்களையும் தவிர மற்ற எல்லோரையும், எல்லாச் செயல்களையும், எல்லா நேரங்களிலும் எதிர்த்துக் கொண்டே இருப்பதுதான் 'புரட்சிகர அரசியலோ' என்னவோ.... நமக்குத் தெரியவில்லை.'' ''நந்தன் வழி'' சந்தர்ப்பவாதங்களை ஏற்க மறுப்பதால் இப்படி ஒரு அவதூறு.

''நந்தன் வழி'' புலிகளே, தனக்குச் சாதகமானது - ஆதரவானது என்று ''புதிய ஜனநாயகம்'' கட்டுரைகளைப் பிரதிகள் எடுத்து விநியோகித்திருக்கின்றனர் என்பது இவர்களுக்குத் தெரியுமா? திம்புப் பேச்சுவார்த்தையின் போது ஈழப் போராளிகளின் நிலையை பு.ஜ. ஆதரித்தது; இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பை எதிர்த்த புலிகளின் போரை ஆதரித்தது; பத்மநாபா கொலை, ராஜீவ் கொலை சம்பவங்களின் போது பு.ஜ எடுத்த நிலையை எடுத்துப் பார்க்கட்டும். ராஜீவ் கொலைக்கு புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் தோழர்கள் மீது சந்தேகம் கிளப்பி - பழிபோட்ட கிட்டுவின் ஆயுதக் கப்பலை இந்தியக் கடற்படை தாக்கி அழித்தும், கிட்டு உட்பட சில புலிகளைக் கொன்றும், சிலரைக் கைது செய்தும் பொய்வழக்குப் போட்டபோதும் பு.ஜ; பு.க எடுத்த நிலைப்பாட்டைப் பார்க்கட்டும்; தென் மாவட்டங்களில் நடந்த சாதிப் படுகொலைகளின் போதும், கடைசியாக மாஞ்சோலை - நெல்லைப் படுகொலை விவகாரத்திலாகட்டும் பார்க்கட்டும்; ''நந்தன் வழி'' சொல்லுவது உண்மையா பொய்யா என்பது தெரியும். சந்தர்ப்பவாதமற்ற, ஒருங்கிணைந்த, நேர்மையான, தொடர்ச்சியான, சித்தாந்த பூர்வமானதே புரட்சிகர அரசியல் என்பதுதான் பு.ஜ. வின் வழி. அதற்கு மாறாக தனது சந்தர்ப்பவாதத்தையே ''புரட்சிகர அரசியல்'' என்று சாதிப்பது தான் ''நந்தன் வழி.''

(தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கா, மனித உரிமைகளின் காவலனா?

**குவாதிமாலா நாட்டு இராணுவ சர்வாதிகாரிகள் நடத்திய மனித உரிமை மீறல்களில் அமெரிக்கா விற்கும் தொடர்புண்டு என்பதை ஐ.நா. மன்றம் அம்பலப்படுத்தியுள்ளது.**

மனித உரிமைகள், அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் ஆன்மாவாக ஆகிவிட்டதாக அதிபர் கிளின்டன் சமீபத்தில் அறிவித்தார். அமெரிக்காவின் இந்த ஆரவார அறிவிப்பு போலித்தனமும், வரலாற்று உண்மைகளை மூடிமறைக்கும் நயவஞ்சகமும் நிறைந்தது என்பதற்கு, உலகின் பல்வேறு ஏழை நாடுகளில் அமெரிக்கா நடத்திய ஆட்சி கவிழ்ப்புகளையும், படுகொலைகளையும் சான்றாகக் கூறலாம்.

தென் கிழக்காசிய நாடான தென் கொரியாவில் 1945 - இல் லியூ லூன் கியூங் என்ற ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி தலைமையில் அமைந்திருந்த ஐக்கிய கொரிய மக்கள் குடியரசையும், இந்தோனேஷியாவில் சுகர்னோ என்பவர் தலைமையில் இருந்த தேசிய அரசையும் அமெரிக்கா நேரடியாகவே தலையிட்டுக் கவிழ்த்தது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி லியூ லூன் கியூங்கைச் சுட்டுக் கொன்றுவிட்டு, சைங்மான் ரீ என்ற இராணுவ சர்வாதிகாரி அமெரிக்கா தயவால் தென் கொரியாவின் அதிபரானார்.

இந்தோனேஷியாவில் சுகர்டோர், பிலிப்பைன்சில் மார்க்கோஸ், காங்கோவில் மொபுடு, ஹெய்தியில் டுவாலியர், பனாமாவில் நோரிகா - இவர்கள் அனைவருமே அமெரிக்காவின் தயவால் சொந்த நாட்டைச் சூறையாடிய பாசிஸ்டுகள் - இராணுவ சர்வாதிகாரிகள்.

இப்படி வெளிப்படையாகவே இராணுவ சர்வாதிகாரிகளையும் பாசிஸ்டுகளையும் தாங்கிப் பிடித்த அமெரிக்கா, "கம்யூனிச சர்வாதிகாரத்தைத் தடுப்பது" என்ற போர்வையில், 1960 களில் வியட்நாம், கம்பூச்சியா, லாவோஸ் நாடுகளின் மீது வெளிப்படையான ஆக்கிரமிப்புப் போரை நடத்தியது. இந்த ஆக்கிரமிப்புப் போரின் பொழுது அமெரிக்கா நடத்திய விமானத் தாக்குதலால் இருபது லட்சம் வியட்நாமியர்களும், ஆறு இலட்சம் கம்பூச்சிய மக்களும் இறந்து போயினர்.

இதற்கு இணையான மனிதப் பேரழிவை, தென் அமெரிக்காவிலும், மத்திய அமெரிக்காவிலும் உள்ள நாடுகளில் நடைபெற்று வரும் ஏகாதிபத்திய எதிர்ப்பு - தேசிய விடுதலைப் போராட்டங்களை ஒடுக்குவதற்கு, அந்நாட்டு இராணுவ சர்வாதிகாரிகளுக்கு உதவுவதன் மூலம் ஏற்படுத்தி வருகிறது, அமெரிக்கா. ஐ.நா. மன்றம், மத்திய அமெரிக்காவிலுள்ள குவாதிமாலா எனும் நாட்டில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக நடந்து வரும் மனித உரிமை மீறல்களில் அமெரிக்காவின் நேரடிப் பங்கு குறித்து ஆதாரப்பூர்வமாகத் தொகுத்து, "மௌனத்தின் நினைவு" என்ற பெயரில் ஆவணமாக வெளியிட்டுள்ளது.

1944 ஆம் ஆண்டு தொடங்கி கிட்டதட்ட பத்தாண்டு காலம் ஜாகோபோ ஆர்பென்ஸ் என்பவரின் தலைமையில் குவாதிமாலாவில் நடந்து வந்த சீர்திருத்த ஆட்சி, அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. தீட்டிக் கொடுத்த சதித்திட்டத்தின்படி, அதிரடி இராணுவப் புரட்சி மூலம் 1954-ஆம் ஆண்டு கவிழ்க்கப்பட்டது. அப்பொழுது அமெரிக்க அதிபராக இருந்த ஐசன்ஹோவர், "குவாதிமாலா, இனிதான் சனநாயகத்தையும், வளர்ச்சியையும் காணப் போகிறது" என இச்சட்டவிரோத ஆட்சிக் கவிழ்ப்பை ஆதரித்துப் பேசினார்.

ஐசன்ஹோவரின் ஆருடத்துக்கு மாறாக, குவாதிமாலாவின் உற்பத்திச் செல்வங்களையும், மூல வளங்களையும் சிறுபான்மை கும்பலொன்று கைப்பற்றிக் கொண்டு, பெரும்பான்மை மக்களுக்கு வறுமையையும், அடக்குமுறையையுமே பரிசாக அளித்தாக "மௌனத்தின் நினைவு" குறிப்பிட்டுள்ளது. மேலும், குவாதிமாலா இராணுவ சர்வாதிகார அரசு, இந்த அநீதியான சமூக ஒழுங்குமுறையைப் பாதுகாக்கும் கருவியாக பரிணமித்ததோடு, 1954 ஆம் ஆண்டு தொடங்கி இராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்து நடந்த மக்களின் போராட்டங்களை, தனி மனிதப் படுகொலைகள், இனப்படுகொலைகள், இரகசியக் கொலைகள், சித்திரவதை, பாலியல் வன்முறை போன்ற அரசு பயங்கரவாத நடவடிக்கைகளின் மூலம் ஒடுக்கியதாக அந்த ஆவணம் கூறுகிறது.

குவாதிமாலாவில் நடந்துள்ள மனித உரிமை மீறல்களுள் 93 சதவீத மனித உரிமை மீறல்களுக்கு அந்நாட்டின் இராணுவம், போலீசு, இரகசிய கொலைப்படைகள் தான் காரணம் என ஐ.நா ஆவணம் உறுதிப்படுத்தியுள்ளது. இந்த மனித உரிமை மீறல்களைப் பற்றியெல்லாம் அக்கறை கொள்ளாமல், அமெரிக்கா, குவாதிமாலாவின் இராணுவ சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு தொடர்ந்து பொருளாதார - இராணுவ உதவியும், அரசியல் ஆதரவும் அளித்து வந்ததையும் ஐ.நா ஆவணம் சுட்டிக் காட்டியுள்ளது.

குவாதிமாலா இராணுவ சர்வாதிகாரிகளை எதிர்த்து ஆயுதப் போராட்டம் நடத்தி வந்த கம்யூனிச புரட்சியாளர்களுக்கு உதவுவதாகக் குற்றஞ் சுமத்தி, அந்நாட்டின் மாயான் பழங்குடி இன மக்களின் மீது அரசு பயங்கரவாத இன ஒடுக்கு முறை ஏவிவிடப்பட்டது. கம்யூனிச புரட்சியாளர்களுக்கும், மாயான் பழங்குடி மக்களுக்கும் உள்ள தொடர்பைத் துண்டிப்பதற்காக, இட்லர் யூத இன மக்களை தனிக் கொட்டடிகளில் அடைத்ததைப் போல, குவாதி

**குவாதிமாலாவில் இரகசியமாகக் கொன்று புதைக்கப்பட்டவர்களின் உடல்களை ஐ.நா. சபை மீண்டும் தோண்டியெடுத்து நடத்திய பரிசோதனை.**





படிப்பகம்

www.padippakam.com

மாலா இராணுவ சர்வாதிகாரிகள், மாயான் இன மக்களின் பூர்வீக கிராமங்களை அழித்து, இராணுவ அரசு உருவாக்கிய மாதிரி கிராமங்களில் மாயான் இன மக்களை அடைத்துச் சித்திரவதை செய்தனர். ஐ.நா.வின் ஆவணம், இந்த இன ஒடுக்குமுறையின் காரணமாக இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மாயான் இன மக்கள் வெளிப்படையாகவும், இரகசியமாகவும் கொல்லப்பட்டதாகவும், கிட்டதட்ட பத்து இலட்சம் மாயான் பழங்குடிகள் சொந்த நாட்டிலேயே அகதிகளாகத் துரத்தியடிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மாயான் பழங்குடி மக்களின் மீது அரசுப் படைகள் ஏவிவிட்ட 626 இனப்படுகொலை தாக்குதல்கள் பற்றி மிக விரிவாக விவரித்துள்ள ஐ.நா. ஆவணம், "படுகொலைகள், தீ வைத்தல் மூலம் அரசுப்படைகள், மாயான் பழங்குடி மக்களின் குடிசைகள், கால்நடைகள், பயிர்களை மட்டுமின்றி, ஒட்டு மொத்த கிராம சமுதாயத்தையே பூண்டோடு அழித்ததாகக் குறிப்பட்டுள்ளது; மேலும் மாயான் பழங்குடி மக்களின் தலைவர்கள், மதகுருமார்களைக் கொன்றொழித்ததோடு, மாயான் பழங்குடி மக்களை நெருக்கமாகப் பிணைத்திருக்கும் அவர்களின் பண்பாட்டு அடையாளங்களைச் சிதைப்பதையே நோக்கமாகக் கொண்டு அரசுப்படைகள் இயங்கியதாகவும்" கூறுகிறது.

குவாதிமாலாவில் நடந்த இம்மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்ய ஐ.நா அமைத்த கமிஷனின் தலைவர் கிறிஸ்டியன் டொமுஸ்காட், இந்த இனப்படுகொலைகளில் அமெரிக்காவின் பங்கு பற்றிக் குறிப்பிடும் பொழுது, "(குவாதிமாலாவில்) என்ன நடைபெறுகிறது என்பதை ஐக்கிய நாடுகள் நன்கு அறிந்திருந்தது. அது (அமெரிக்கா) எவ்வித மறுப்பும் தெரிவிக்காததோடு, குவாதிமாலா இராணுவத்திற்குத் தொடர்ந்து ஆதரவு கொடுத்து வந்தது" எனக் கூறுகிறார்.

★☆★

குவாதிமாலாவில் மட்டுமின்றி, பெரு, சிலி, கொலம்பியா, எல்சல்வடார், ஹோண்டுராஸ் உள்ளிட்டு பல்வேறு மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகளிலும் அமெரிக்கா தனது மேலாதிக்க நோக்கங்களுக்காக, இராணுவ சர்வாதிகாரிகளை ஆட்சியில் அமர்த்தியது. சிதைந்து போன சோவியத் ஒன்றியத்திற்கும், அமெரிக்காவிற்கும் இடையே பனிப்போர் நடந்து வந்த காலத்தில், பனாமா கால்வாய் அமைந்துள்ள மத்திய அமெரிக்காவிலும், கனிவளங்கள் நிறைந்த தென் அமெரிக்காவிலும் சோவியத் யூனியனின் செல்வாக்கு வளர்ந்துவிடக் கூடாது; இராணுவ சர்வாதிகாரிகளையும், அமெரிக்காவின் நவகாலனிய ஒடுக்கு முறையையும் எதிர்த்து கம்யூனிசப் புரட்சியாளர்களும் தேசிய சக்திகளும் நடத்திவரும் போராட்டங்களை ஒடுக்குவது என்ற இரு நோக்கங்களுக்காவே அமெரிக்கா, இந்த இராணுவ சர்வாதிகாரிகளுக்கு கோடிக்கணக்கான டாலர்களை "கடன்", "உதவி" என்ற பெயரில் வழங்கியது; ஆயுத உதவியும் பயிற்சியும் அளித்தது. மத்திய - தென் அமெரிக்க நாடுகளில் பாராளுமன்ற ஆட்சிமுறை அமைவதைக்கூட அமெரிக்கா அனுமதித்ததில்லை.

• தென் அமெரிக்க நாடான பெருவில் 1984 ஆம் ஆண்டில் மட்டும் கிட்டதட்ட 5,000 க்கும் மேற்பட்டோர் இராணுவ சர்வாதிகார ஆட்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்டனர்; அனைத்துலக பொது மன்னிப்பு நிறுவனம் மட்டுமே 1,005 சடலங்களைக் கண்டுபிடித்து அடையாளம் காட்டியது. இப்படுகொலை நடந்த ஆண்டில் மட்டும், அமெரிக்க அரசு பெருவின் இராணுவ சர்வாதிகாரிகளுக்கு 90 இலட்சம் டாலர் இராணுவ உதவி அளித்தது; இந்த இராணுவ உதவி அதற்கு அடுத்த ஆண்டில் 2 கோடி அமெரிக்க டாலர்களாக உயர்ந்தது.



**அமெரிக்க இராணுவம், தங்களை சுட்டுக் கொல்லத் தயார் ஆவதைக் கண்டு அஞ்சி நடுங்கும் வியட்நாமின் மைலாய் கிராமத்தைச் சேர்ந்த குழந்தைகள், தாய்மார்கள்.**

• தென் அமெரிக்க கண்டத்திலுள்ள மற்றொரு நாடான கொலம்பியாவில் மூலதனமிட்டுச் சுரண்டுவதில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தான் முதலிடத்தில் உள்ளது. அமெரிக்காவின் மேலாதிக்கத்தையும், கொலம்பிய இராணுவ சர்வாதிகாரிகளையும் எதிர்த்துப் போராடிவரும் "கொலம்பிய புரட்சிகர ஆயுதப்படை" எனும் அமைப்பு, கொலம்பிய நாட்டிலுள்ள 32 மாநிலங்களுள், 10 மாநிலங்களில் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றுள்ளது. இவ்வமைப்பு நடத்திவரும் புரட்சிகரப் போராட்டத்தை ஒடுக்குவதற்காகவே, இராணுவ சர்வாதிகார அரசு, அந்த பத்து மாநிலங்களிலும் காலவரையற்ற இரவு நேர ஊரடங்கு உத்தரவை அமல்படுத்தி வருகிறது.

அமெரிக்க இராணுவமும், சி.ஐ.ஏ.வும் போதை மருந்து கடத்தலைத் தடுப்பது என்ற பெயரில் கொலம்பியாவில் நுழைந்துள்ளன. கிட்டதட்ட 35 ஆண்டுகளாக கொலம்பியாவில் நடந்துவரும் ஏகாதிபத்தியம் எதிர்ப்பு தேசிய விடுதலைப் போரில், ஏறத்தாழ 30,000 பேர் இராணுவத்தாலும், இரகசியக் கொலைக் குழுக்களாலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இராணுவ சர்வாதிகாரிகள் கொலம்பிய மக்களின் மீது ஏவிவிட்டுள்ள அரசு பயங்கரவாத தாக்குதல்களால், 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

தொழிற்சங்க இயக்கங்கள் வலுவாக இருக்கும் கொலம்பியாவின் வடக்கிலுள்ள உராபா பகுதியில், கடந்த சில வருடங்களில் 5000-க்கும் அதிகமான தொழிலாளர்கள் இராணுவத்தின் இரகசிய கொலைக் குழுக்களால் படுகொலை செய்யப்பட்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியம், அமெரிக்க ஐரோப்பிய கண்டங்களை இணைக்கும் பனாமா கால்வாயை விட மேம்பட்ட மற்றொரு கால்வாயை இந்த உராபா பகுதியில் கட்ட முயன்று வருவதால், இப்பொழுது சமாதானத் தூதுவனாக வேடம் போட ஆரம்பித்துவிட்டது. இதன் முதல் கட்டமாக, இரகசிய கொலைக் குழுக்களின் சூத்திரதாரியான இராணுவ அதிகாரி ரிடோ அலெஜோ பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளான்.

• மத்திய அமெரிக்க நாடான எல்சல்வடார் இடதுசாரி தீவிரவாதிகளின் பிடியில் சிக்கிவிடாமல் காப்பாற்றுவதற்காக, 1982 இல் அமெரிக்க ரீகன் அரசு 25 கோடி அமெரிக்க டாலர்களை, அந்நாட்டு இராணுவ சர்வாதிகாரிகளுக்கு உதவியாக வழங்கியது. எல்சல்வடார் இராணுவத்துக்கு ஆயுதப் பயிற்சியும் கொடுத்த அமெரிக்கா, ஆயுதந்தாங்கிய கொரில்லாக்களை ஒழிப்பதற்காக, நிகரகுவா நாட்டில் இருந்து ஓடிவந்த எதிர்ப்புரட்சி கும்பலை



படிப்பகம்

www.padippakam.com

யும், ஹோண்டுராஸ் கூலிப்படையினரையும் கொண்ட இரகசிய கொலைக் குழுக்களைக் கட்டியமைத்தது. இந்த ஆட்கொல்லிப்படை கிட்டதட்ட 50,000 பேரை படுகொலை செய்துள்ளதாக அனைத்துலக மனித உரிமைச் சங்கம் கூறியுள்ளது.

• மத்திய அமெரிக்க நாடான நிகரகுவாவில், சாண்டினிஸ்டுகள் தலைமையில் அமைந்திருந்த தேசிய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக, நிகரகுவாவுக்கு அருகிலுள்ள ஹோண்டுராஸில் ஆயுதந்தாங்கிய கூலிப்படையைக் கட்டியமைத்தது, அமெரிக்கா. ''காண்ட்ராஸ்'' எனப்படும் இந்த ஹோண்டுராஸ் கூலிப்படை ஏறத்தாழ 10,000 சாண்டினிஸ்டா போராளிகளைப் படுகொலை செய்தது. நிகரகுவா தேசிய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக, அமெரிக்கா செய்த சதிகளைக் கண்டித்து, ஹேக் நகரில் அமைந்துள்ள அனைத்துலக நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் இத்தீர்ப்பை ஒரு பொருட்டாக மதிக்காமல், நிகரகுவாவில் தனது நர வேட்டையைத் தொடர்ந்து நடத்தியது, அமெரிக்கா.

• தென் அமெரிக்க நாடான சிலியில் அலெண்டே என்பவர் தலைமையில் அமைந்திருந்த இடதுசாரி ஓட்டுக்கட்சிகளின் கூட்டணி ஆட்சியை, 1973 ஆம் ஆண்டு செப்டம்பரில் அமெரிக்கா சதித்தனமான முறையில் கவிழ்த்தது. அமெரிக்காவுக்கு அடிபணிய மறுத்த அதிபர் அலெண்டே சுட்டுக் கொல்லப்பட்டார். அமெரிக்காவின் வெளியுறவுத் துறை - சி.ஐ.ஏ உதவியோடு அதிரடி இராணுவப் புரட்சியை நடத்திய பினோசெட் அதிபராகப் பதவியில் அமர்த்தப்பட்டான்.

ஆட்சிக் கவிழ்ப்பு நடந்த அதே நாளில் - 1973 செப்டம்பர் 11 - மட்டும் 50,000க்கும் மேற்பட்ட சிலி நாட்டு மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்; பத்து இலட்சத்துக்கும் அதிகமானோர் சிறைக் கொட்டடிகளில் தள்ளப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டனர். பினோசெட் கட்டியமைத்த இரகசியக் கொலைப்படை 1973 தொடங்கி 1985 முடிய 15,000 பேரைப் படுகொலை செய்ததாக அனைத்துலக மனித உரிமைக் கழகம் குறிப்பிட்டுள்ளது.

• அமெரிக்காவின் எல்லையை யொட்டி, மத்திய அமெரிக்காவில் அமைந்துள்ள கியூபா நாட்டின் போலி கம்யூனிச அரசைக் கவிழ்ப்பதற்கு, 40 ஆண்டுகளாகத் தொடர்ந்து முயன்று வருகிறது அமெரிக்கா. பிடல் காஸ்ட்ரோ தலைமையைக் கவிழ்ப்பதற்காக 1959 தொடங்கி இது நாள் வரை அமெரிக்கா தூண்டிவிட்டு நடத்தியுள்ள சதிச் செயல்கள், குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளால் 3,478 கியூபா மக்கள் இறந்து போனதாகவும், 2,099 பேர் ஊனமுற்று முடமாகிப் போனதாகவும் குற்றஞ்சுமத்தியுள்ளது கியூபா. இதற்கு நட்ட ஈடாக, அமெரிக்கா 77,830 கோடி டாலர் தர வேண்டும் எனக் கோரி, கியூபா அரசு வழக்கு தொடுத்துள்ளது.

★☆★

வியட்நாம் போருக்குப் பிறகு அமெரிக்கா, ஈராக் மீதுதான் மிகப் பெரும் இராணுவத் தாக்குதலை நடத்தியது. தானே வளர்த்துவிட்ட சர்வாதிகாரி சதாம் உசேனின் பிடியில் இருந்து குவைத்தை 'மீட்பதற்காக' ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த வளைகுடாப் போரில், அமெரிக்காவின் நவீன மின்னணு இராணுவ ஆயுதங்களைப் பரிசோதிக்கும் களமாக ஈராக்கைப் பயன்படுத்திக் கொண்டது. சர்வாதிகாரி சதாமை அடிபணிய வைப்பதற்காக ஈராக் மீது நடத்தப்பட்ட வான் வழித் தாக்குதலில் அந்நாட்டின் அடிப்படை சுகாதார வசதிகள் அனைத்தும் அழிக்கப்பட்டன. இதனாலும், ஈராக் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடையினாலும் கடந்த எட்டு ஆண்டுகளில், ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான ஈராக்கிய குழந்தைகள் வயிற்றுப் போக்கு கண்டு இறந்து போயின. சர்வாதிகாரி மிலோசெவிச் பிடியில் இருந்து கொசோவா அல்போனியர்களைக் 'காப்பதற்காக', யுகோஸ்லாவியா மீது அமெரிக்கா தலைமையில் நேடோ படைகள் நடத்திய வான்வழித் தாக்குதலில் இறந்துபோன அப்பாவிகளின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டிவிட்டது.

எதிரி நாடுகளின் மீது வான்வழித் தாக்குதலை நடத்தி நிர்மூலமாக்குவதை முதல் உலகப் போர் தொட்டே ஏகாதிபத்தியங்கள் ஓர் உத்தியாகக் கடைப்பிடித்து வருகின்றன. எதிரியை அடிபணிய வைக்க வான்வழித் தாக்குதல் நடத்துவதன் மூலம் தனது சொந்த துருப்புகளுக்கு ஏற்படும் இழப்புகளைக் கணிசமாகக் குறைத்துக் கொள்வதோடு, உள்நாட்டிலும் போருக்கு எதிரான உணர்வுகள் எழுவதைத் தடுத்து விட முடியும் என நம்புகிறது அமெரிக்கா. இதனால் தான், அமெரிக்கா, தனது மேலாதிக்க நோக்கங்களுக்காக யுகோஸ்லாவியா மீது நடத்திய தாக்குதலின் பொழுது, தரைப்படைத் துருப்புகளை இறக்கிவிட மறுத்துவிட்டது. அமெரிக்கா, ஈராக் மற்றும் யுகோஸ்லாவியா மீது நடத்திய வான் வழித் தாக்குதலில், அமெரிக்காவின் 'எதிரிகள்' சந்தித்த இழப்புகளை விட, அவ்விரு நாட்டு மக்கள் தாம் பெரும் இழப்புகளை எதிர் கொண்டனர்.

★★★

அமெரிக்காவின் நேரடி இராணுவ நடவடிக்கையும், அமெரிக்க ஏகாதிபத்தியம் தாங்கி பிடிக்கும் இராணுவ சர்வாதிகாரிகள் - பாசிஸ்டுகளின் அட்டூழியங்களும் மட்டுமல்ல, அமெரிக்கா ஏழை நாடுகளின் மீது திணித்து வரும் தாராளமயப் பொருளாதாரக் கொள்கைகளும் கூட உழைக்கும் மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் மனித உரிமை மீறல்தான்.

மனித உரிமைகள் பற்றிய ஐ.நா.வின் தீர்மானம், ''சமூக, பொருளாதார, கலாச்சார, அரசியல் வளர்ச்சியில் பங்கு பெறவும், அவ்வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்யவும், அவ்வளர்ச்சியின் பலன்களை அனுபவிக்கவும் ஒவ்வொரு தனி மனிதனுக்கும், இனக் குழுக்களுக்கும் நாட்டு மக்களுக்கும் உரிமையுண்டு'' எனப் பிரகடனப்படுத்தியுள்ளது. இப்படிப்பட்ட உரிமை உலக மக்களுக்கு வழங்கப்படுவதை ஏற்றுக் கொள்ள மறுத்துவரும் ஒரேநாடு அமெரிக்காதான். தனது ரத்து செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, இம்மனித உரிமைப் பிரகடனம் ஐ.நா. மன்றத்தில் நிறைவேறுவதைத் தடுத்தும் வருகிறது, அமெரிக்கா.

இப்படி உலக நாடுகளுக்கும், மக்களுக்கும் அரசியல், பொருளாதார, கலாச்சார உரிமைகளைத் தர மறுக்கும் அமெரிக்கா, மனித உரிமைகள் தான் தங்களது வெளியுறவுக் கொள்கை எனப் பீற்றிக் கொள்வது நயவஞ்சகமானது. உலகிலுள்ள ஏழை நாடுகளையும் அந்நாட்டு மக்களையும் அடிமைப்படுத்தி மேலாதிக்கம் செய்வதுதான் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை; ஏழைநாடுகளின் மூல வளங்களையும், அந்நாட்டு மக்களின் உழைப்பையும் பன்னாட்டு நிறுவனங்கள் சுரண்டிக் கொழுக்க பாதை வகுத்துக் கொடுப்பதுதான் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை. தன்னை எதிர்க்கும் நாடுகளின் அரசைக் கவிழ்ப்பதும், அரசுத் தலைவர்களைப் படுகொலை செய்வதும்; ஏழை நாடுகள் கம்யூனிஸ்டுகளின் தலைமையில் போராடி, ஏகாதிபத்திய அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை அடைந்துவிடக் கூடாது; சுயசார்பு பொருளாதாரத்தைக் கட்டியமைத்துவிடக் கூடாது என்பதும் தான் அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கை. இந்த உண்மைகளை மூடிமறைக்கதான், ''கம்யூனிச சர்வாதிகாரத்தைத் தடுப்பது'', ''சனநாயகத்தைக் காப்பது'', ''மனிதநேயத் தலையீடு'' என வாய்ச் சவடால் அடிக்கிறது.

குவாதிமாலாவில் நடந்த மனித உரிமை மீறல்களில் அமெரிக்காவின் பங்கை அம்பலப்படுத்தி ஐ.நா. வின் ஆவணம் வெளிவந்த பின்பு, அதிபர் கிளிண்டன், ''குவாதிமாலா இராணுவத்துக்கு அமெரிக்கா உதவி செய்தது தவறு; அமெரிக்கா இது போன்ற தவறுகளைத் திரும்பச் செய்யாது'' என்றார்; அதே சமயம் ஈராக்கில் ஐந்து இலட்சம் குழந்தைகள் இறந்து போனது பற்றிக் கேட்ட பொழுது, ''ஈராக் தகுந்த விலையைக் கொடுத்திருப்பதாக'' ஆணவத்தோடு கூறியது கிளிண்டன் நிர்வாகம். மனித உரிமைகள் பற்றிய அமெரிக்காவின் அக்கறை போலித்தனமும், நயவஞ்சகமும் நிறைந்தது என்பதைப் புரிந்து கொள்ள இதைவிட வேறு சான்று தேவையில்லை.

• ரஹீம்



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

தடைகளையும். அரசியல் ரௌடிகளின் அச்சுறுத்தலையும் மீறி மக்கள் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்றது.

### கேரளாவில்

கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் குமிளி, வண்டிப் பெரியாறு மற்றும் சுற்றுப்புற பகுதியில் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சார இயக்கத்தை பு.மா.இ.மு. சிறப்பாக நடத்தியது. இப்போலி ஜனநாயகத் தேர்தலை ஏன் புறக்கணிக்க வேண்டும் என்பதை விளக்கி தமிழிலும் மலையாளத்திலும் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தை ஆயிரக்கணக்கான மக்களிடம் விநியோகித்து பிரச்சாரம் செய்தது. தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் இப்பிரச்சார இயக்கத்தைப் பெரிதும் வரவேற்று ஆதரவளித்தனர்.

### சென்னையில்

போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு அறைகூவல் விடுத்து சுவரெழுத்து, துண்டுப் பிரசுரம், தட்டிகள் மூலம் பிரச்சாரம் செய்ததோடு, தெருமுனைக் கூட்டங்களையும் ம.க.இ.க.வும் பு.ஜ.தொ.மு.வும் இணைந்து நடத்தின. 3.9.99 அன்று போலீசாரின் நீண்ட இழுத்தடிப்புகளுக்குப் பிறகு அனுமதி பெற்று அம்பத்தூர் ரயில் நிலையம் அருகே தேர்தல் புறக்கணிப்பு விளக்கப் பொதுக் கூட்டத்தை பு.ஜ.தொ.மு. நடத்தியது. கம்பம் பகுதி வி.வி.மு. தோழர் மோகன் சிறப்புரையாற்றிய இக்கூட்டத்தில் திரளான உழைக்கும் மக்கள் பங்கேற்று ஆதரவளித்தனர்.

## மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர் போராட்டம் - படிப்பினை

மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர் போராட்டம் இரத்தச் சேற்றில் அடக்கப்பட்டதையும், ஆட்சியாளர்கள் ஓரணியில் நின்று இப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதையும், தொழிலாளி வர்க்கம் இதிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு புரட்சிகர அரசியலை முன்வைத்து அமைப்பாக அணிதிரண்டு போராட வேண்டிய அவசியத்தையும் விளக்கி 23.8.99-இல் சென்னை ஏ.கே. நாயக் பவனில் பு.ஜ.தொ.மு. கருத்தரங்கம் நடத்தியது. அதைத் தொடர்ந்து 21.9.99 அன்று மாலை அம்பத்தூர் தொழிற்பேட்டை மையப் பேருந்து நிலையத்தில் தெருமுனைக் கூட்டமும், 23.9.99 அன்று மாலை பல்லாவரம் ஜி.இ.சி. தொழிற்சங்க கட்டிடத்தில் அரங்கக் கூட்டமும் நடத்தியது. திரளான தொழிலாளர்களும், தொழிற்சங்க முன்னணியாளர்களும் ஜனநாயக உணர்வுடையோரும் இக்கூட்டங்களில் பங்கேற்று ஆதரவளித்தனர்.

— புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, சென்னை.

## போலீசு - சாராயக் கும்பலுக்கு எதிராக வி.வி.மு.வின் நூதனப் போராட்டம்

திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டத்தில் உள்ள பெருவளப்பூரில் போலீசாரின் ஆதரவோடு கள்ளச்சாரயம் காய்ச்சி விற்கப்பட்டு வருகிறது. இக்கிராமத்தில் கூலி - ஏழை விவசாயிகளே பெரும்பான்மையினராக உள்ளனர். இவர்களது அற்பக் கூலியையும் அரைவயிற்றுக் கஞ்சியையும் தட்டிப் பறிக்கும் வகையில் செயல்பட்டு வரும் கள்ளச் சாராயக் கும்பலைக் கைது செய்யும்படி ஆட்சியாளர்களிடமும் அதிகாரிகளிடமும் போலீசிடமும் பலமுறை ஊர் மக்கள் நேரில் சென்று மனுக் கொடுத்தும் எந்தப் பலனுமில்லை.

இப்பகுதியில் இயங்கிவரும் விவசாயிகள் விடுதலை முன்னணி, மக்களின் வாழ்வில் சுருக்குக் கயிராகத் தொங்கிக் கொண்டு அச்சுறுத்திவரும் கள்ளச் சாராயத்தை ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன் நூதனப் போராட்டத்தில் இறங்கினர். அதன்படி, பெருவளப்பூர் ஊராட்சி மன்றம் முன்பு 18.9.99 அன்று மாலை 6 மணியளவில் மதுவிலக்கு காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் வட்டாட்சியர் முன்னிலையில் கள்ளச் சாராயக் கடை திறப்பு விழா நடைபெறும் என்றும், இலால்குடி காவல் துறை துணை கண்காணிப்பாளர் விழாவைத் துவக்கி வைக்க, சிறுகனூர் காவல்துறை ஆய்வாளர் முதல் சாராய பாக்கெட்டைப் பெற்றுக் கொள்வார் என்றும், பொதுமக்களும் மதுப்பிரியர்களும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறும் இலால்குடி, பெருவளப்பூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களிலும் திருச்சி நகரத்திலும் வி.வி.மு சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. இதனால் ஆத்திரமடைந்த போலீசார் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த போதே இரு வி.வி.மு. தோழர்களைக் கைது செய்தனர்.

ஒட்டியவர்களைக் கைது செய்துவிட்டோம்; இனி பிரச்சினையில்லை என்று மிதப்பாக நிமிர்ந்த போலீசின் முகத்தில் கரியைப் பூசும் வண்ணம் வி.வி.மு தோழர்கள் மற்றொரு குழுவாகச் சென்று இதே சுவரொட்டிகளை வரிசையாக ஒட்டினர். அதே வேளையில் கைது செய்த தோழர்களை விடுதலை செய்யக் கோரியும் சாராய கும்பலின் எடுபிடிகளான போலீசை அம்பலப்படுத்தியும் உடனடியாக சுவரொட்டிகளைத் தயாரித்து இப்பகுதி முழுவதும் வி.வி.மு. தோழர்கள் ஒட்டினர். இதனால் ஆடிப்போன போலீசார், கைது செய்யப்பட்ட வி.வி.மு. தோழர்களிடம் ''இப்போதே உங்களை விடுதலை செய்கிறோம்; இனிமேல் போஸ்டர் ஒட்ட வேண்டாம் என்று உங்கள் அமைப்பினரிடம் சொல்லுங்கள்'' என்று கெஞ்சினர்.

திருச்சி நகரிலும் பரவலாக கள்ளச் சாராயக் கடை திறப்பு விழா சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதோடு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலும் இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டதால் நகரமே பரபரப்பாகி, பெருத்த உற்சாகத்துடன் மக்களிடம் வரவேற்பைப் பெற்றது. பத்திரிகைகள் இச்சுவரொட்டியைப் பற்றி முதல் பக்கத்தில் முக்கிய செய்தியாக வெளியிட்டதும், பிரச்சாரம் மேலும் விரிவாக மக்களைச் சென்றடைந்தது. பீதியடைந்த மாவட்ட ஆட்சியாளர், சம்பந்தப்பட்ட போலீசாரிடம் தாமே நேரடியாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சாராயம் விற்போரைக் கைது செய்து தமது மானத்தைக் காப்பாற்றும்படி அரற்றியுள்ளார். அதைத் தொடர்ந்து ஒரு கள்ளச் சாராயப் பேர்வழியை போலீசார் கைது செய்தனர். இச்சுவரொட்டி இயக்கத்தால் பீதியடைந்த கள்ளச்சாராய கும்பல், இப்பகுதியை விட்டே ஓடிவிட்டதாக தகவல்கள் வந்துள்ளன.




போலீசு - சாராய கிரிமினல் கும்பலைக் கதிகலங்க வைத்த வி.வி.மு.வின் சுவரொட்டி

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி,
பெருவளப்பூர்.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



பிரதமர் வாஜ்பாயி போட்டியிடும் லக்னோ தொகுதியில் உள்ள மகோனா என்ற சிற்றூரையும், அதைச் சுற்றியுள்ள சில கிராமங்களையும் சேர்ந்த பொதுமக்கள், தேர்தலில் வென்ற எந்தவொரு ஓட்டுக் கட்சியும் தங்கள் கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவுமே செய்து தராததால், இந்தத் தேர்தலில் ஓட்டுப் போடாமல் புறக்கணிக்கப் போவதாக அறிவித்திருந்தனர். அந்தக் கிராம மக்களை எப்படியாவது மயக்கி, ஓட்டுப் போட வைப்பதற்காக நடத்தப்பட்ட பிரச்சாரம்தான் இந்தப் படம்.

இப்படி அடிப்படை வசதி கோரி அல்லது ஓட்டுக் கட்சிகளின் மீது நம்பிக்கை யிழந்து தேர்தலில் ஓட்டுப் போடாமல் புறக்கணிக்கும் வாக்காளர்களை, ஓட்டுச் சாவடி பக்கம் கவர்ந்திழுப்பதற்காக, தேர்தலின் - வாக்குரிமையின் மகிமை குறித்து வானொலியிலும், வானொளியிலும் செய்யப்பட்ட பிரச்சாரத்தையும், உதயமூர்த்தி, சிவசங்கரி போன்ற ஊதுகுழல்கள் நடத்திய கருத்தரங்குகளையும் சொல்லி மாள முடியாது. ''வாக்குரிமை புனிதமானது; இந்திய மக்களின் கையில் உள்ள வலிமையான ஆயுதம்; வாக்குரிமையைக் கொண்டு ஊழல் அரசியல்வாதிகளைத் தண்டிக்கலாம்; நல்லாட்சியை உருவாக்கலாம்'' என்று இந்திய மக்களுக்கு வாக்குரிமை குறித்து ''விழிப்புணர்ச்சி'' ஏற்படுத்த முயன்றனர்.

இதோ, இந்த இரண்டு பெண்களும் உ.பி. மாநிலத்தின் அமேதி தொகுதியிலுள்ள ககஹுவா கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சாதியினர். இந்திய ஜனநாயகம் இவர்களுக்கு வழங்கிய வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்காக ஓட்டுச் சாவடிக்குச் சென்ற இப்பெண்களை, மேல்சாதி வெறியர்கள் ஓட்டுப் போட விடாமல் தடுத்துத் துரத்தியடித்து விட்டனர். உ.பி.யில் பெரும்பாலான தாழ்த்தப்பட்டோரின் ஓட்டுக்கள், தற்பொழுது மேல்சாதிக் கட்சிகளான காங்கிரசு, பா.ஜ.க., சமாஜ்வாதி கட்சிகளுக்கு விழுவதில்லை. பெரும்பாலான தாழ்த்தப்பட்டோர் பகுஜன் சமாஜ் கட்சிக்குதான் வாக்களிக்கின்றனர். இதனால்தான் மேல்சாதி வெறியர்கள் இத்தாழ்த்தப்பட்ட பெண்களை ஓட்டுப்போட விடாமல் துரத்தியடித்து விட்டனர்.

காசுமீரில், வாக்களிக்க மறுத்த மக்களைத் துப்பாக்கி முனையில் மிரட்டி வாக்களிக்க வைத்து, இந்திய ஜனநாயகத்தைக் காப்பாற்றிய இராணுவமும் போலீசும், உ.பி.யிலும், பீகாரிலும், தமிழகத்தில் சிதம்பரத்திலும் மேல்சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை வாக்குப் போடாமல் தடுத்துத் துரத்தியடித்த பொழுது, கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்தன. தான் விரும்பும் கட்சிக்கு, வேட்பாளருக்கு வாக்கு அளிக்க மேல்சாதிக்காரனுக்கு இருக்கும் உரிமை, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் மறுக்கப்படுகிறது. மேல்சாதி வெறியர்கள் அனுமதித்தால்தான், அவர்களின் விருப்பப்படிதான் தாழ்த்தப்பட்டவர்கள் வாக்கு அளிக்க முடியுமென்றால், இதை ஜனநாயகம் என்று கூற முடியுமா? இப்படி மேல்சாதி வெறியர்களின் விருப்பப்படி உருவாக்கப்படும் ஆட்சியை மக்களாட்சி என்றுதான் அழைக்க முடியுமா?

தேர்தலையும், வாக்குரிமையையும் சர்வரோக நிவாரணியாகக் காட்டும் ஏமாற்று வித்தை ஒருபுறம்; நம்பி வாக்களித்த மக்களின் வயிற்றில் அடிக்கும் மோசடித்தனமும், தாழ்த்தப்பட்ட மக்களை வாக்களிக்க விடாமல் துரத்தியடிக்கும் மேல்சாதி வெறியர்களின் ஆதிக்கமும் நிறைந்ததுதான் இந்திய 'ஜனநாயகம்' என்ற உண்மை மறுபுறம். இந்தப் போலி ஜனநாயகம் நீடிப்பதை இனியும் அனுமதிக்கலாமா?

